வெளியீடு எண் 556.

# திருக்குவளைத் தல வரலாறும்

## தோத்திரங்களும்

R.O.B.
95
B.No. 192
29/6/72



கொடிமரமும், இரண்டாங்கோபுரமும்.

Q23:38.21193.T
N64
113030

1972 [விலை. 70 பைசா.



ஸ்ரீ அவனிவிடங்கத் தியாகராஜர்

வெளியீடு எண். 556.

உ

சிவமயம்

# திருக்குவளைத் தல வரலாறும் தோத்திரங்களும்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாருவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவுளப்பாங்கின்வண்ணம்

**திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்**

வெளியிடப்பெற்றது.

6—6—1972

முதற் பதிப்பு 1964

இரண்டாம் பதிப்பு 1972

113030

023:38.21193.T

N64-2

ஞானசம்பந்தம் அச்சகம்,

— தருமபுரம். —

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# முன்னுரை

'நிலவுலகமே நலவுலகம்' என ஆன்ருேர் சிறப்பித்துச் சொல்லுமாறு அதற்கு ஏற்றத்தைத் தருவன சிவத் தலங்களேயாம். அத் தலங்களிலும் மிகச் சிறப்புடைய தலங்கள் சில. அவை, சிவபிரான் கூத்தப் பெருமாளுகவும், தியாகேசப் பெருமாளுகவும் இருந்து அரிய நடனங்கள் பலவற்றைச் செய்தருளும் பஞ்ச சபைத் தலங்களும், சப்த விடங்கத் தலங்களுமாம்.

பஞ்ச சபைகளுள் முதன்மை வாய்ந்த கனக சபையாகிய பொன்னம்பலமே, 'கோயில்' எனச் சிறப்பித்து வழங்கப்பெறுதல் அனைவரும் நன்கறிந்தது. அங்ஙனமே சப்த விடங்கத் தலங்களுள் முதன்மை வாய்ந்த வீதி விடங்கத் தலமாகிய திருவாரூரும் சிறப்பித்துக் கூறப் பெறுதலைத் திருமுறைகளுள் பலவிடத்தும் காணலாம்.

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ

மருவனைய் மண்ணும் விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகந்
திருவினுள் சேர்வதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே

என்பது முதலாகத் திருநாவுக்கரசர் அருளிச்செய்தல், திருவாரூரின் பழமையை நன்குணர்த்தும். இன்னும் அவர் இறைவனை, 'அமரர்நாடு ஆளாதே ஆரூர்ஆண்ட எம்மான்' என்று அருளும் முகத்தால், தியாகராசரது பெருமையையும், அவர் எழுந்தருளியிருக்கும் திருவாரூரின் சிறப்பையும் இனிது விளக்குகின்றார். 'திருவாரூரில் பிறக்க முத்தி' என்பதனாலும், ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்ற சுந்தரர் திருவாக்காலும் திருவாரூரின் பெருமை அளவிடற்கரியதாகின்றது.

இத் திருவாரூர் முதலாக உள்ள சப்த விடங்கத் தலங்களுள் திருக்கோளிலி அவனிவிடங்கத் தலமாய் விளங்குவது. இது மூவர் பாடலும் பெற்றது; சுந்தரருக்குக் குண்டையூரில் கொடுக்கப்பட்ட நென்மலைகளை எல்லாம் சிவபெருமான் பூத கணங்களை ஆட்களாக ஏவித் திருவாரூரில் சேர்ப்பித்த அற்புதத் திருத்தலம், மற்றும் பிரமன் முதலியோர் வழிபட்டது முதலிய பல பெருமைகளை உடையது இத்தலம்.

'திருக்குவளை' என இப்பொழுது வழங்கும் இவ்வற்புதத் தலம். திருத்தருமையாதீனத்தின் பரிபாலனத்

தில் உள்ள தேவஸ்தானங்களில் ஒன்ருய் விளங்குகின்றது, இதில்; திருத்தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாணையினுல் இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளியிடப்பெற்றது.

இந்நூலில் முதற்கண் திருக்குவளைத் தலவரலாறும், அதனையடுத்து சிவாலய தத்துவம், சிவாலய தரிசன விதி, கும்பாபிஷேக விளக்கம் முதலியனவும் அமைந்துள்ளன. இவற்றை அடுத்துத் திருக்கோளிலித் தேவாரத் திருப்பதிகங்களும் இடம்பெற்றிருத்தல், இந்நூலின் சிறப்பை மிகுவிப்பதாகும். இத் தலத்திற்கு அமைந்த உலாப் பிரபந்தம் இறுதியில் இந்நூலை அலங்கரிக்கின்றது. இவ்வுலாவை இயற்றியவர் இன்னர் என்பது அறியப்படவில்லை எனினும், இப்பிரபந்தத்தால், திருக்கோளிலி பற்றிய வரலாறுகள் பல வெளியாகின்றன.

இன்ன சிறப்புக்கள் பலவற்றுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளால் வெளிவரும் இதனை அனைவரும் பெற்று, அனைத்து நலனும் எய்துக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாணைப்படி,

**வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்.**

உ

சிவமயம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருக்குவளைத் தல வரலாறு | 1 |
| 2. | சிவாலய தத்துவமும் மகாகும்பாபிஷேகமும் | 22 |
| 3. | திருக்கோளிலித் திருப்பதிகங்கள் | 36 |
| 4. | திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி உலா | 45 |



தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

# திருக்குவளைத் தலவரலாறு

மூவர் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்று, சப்தவிடங்க ஸ்தலங்களுள் ஒன்ருய் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நெல் மலையை எடுத்துச்செல்ல ஆள்வேண்டிப் பாடிய சிறப்புக்கு உரியதாய் விளங்குவது திருக்குவளை என்னும் இத் திருத்தலம்.

## இருப்பிடம் :

இத்தலம் தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம் தாலூகாவில் திருவாரூரிலிருந்து அறந்தாங்கி செல்லும் இருப்புப் பாதையில் திருநெல்லிக்காவல் புகைண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஏழுகல் தூரத்திலும், நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் கற்பாதையில் கீழையூரிலிருந்து மூன்றுகல் தூரத்திலும் இருக்கிறது. திருவாரூரிலிருந்து இத்தலத்திற்கு நேரே செல்ல பஸ் வசதியும் இருக்கிறது.

## தலப் பெருமை :

ஆரூருக்கு அடுத்த நிலையில் தியாகேசப் பெருமான் இத்தலத்தில் சிறந்து விள்ங்குகிருர். இந்தத் தேவஸ்தானம் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம் என்று வழங்கிவருகிறது.

திருவாரூரில் பெருமான் புற்றிடங் கொண்டவராய் விளங்குதல் போலவே இத்தலத்திலும் வெண்மணலே சிவமூர்த்தமாக விளங்குகிறார்.

பிரமன் வழிபட்டது :- ஆதியில் பிரமதேவன் படைத்தல் தொழிலைப் பெற விரும்பிப் புட்பவனம் என்னும் இத்தலத்தை அடைந்து சந்திர நதியில் வெண்மணலை எடுத்துச் சிவலிங்கமாகப் பிடித்துவைத்துச் சிவபூசைசெய்து கற்ப காலமெல்லாம் இறைவனை எண்ணித் தியானத்திலிருந்தனன். பெருமான் வழிபாட்டிற்கிரங்கிக் காட்சியருளி வேண்டும் வரம் பலவும் அளித்தருளினான். பிரமன் அச் சிவலிங்கப் பெருமானுக்குக் கோயிலெடுத்துத் திருவிழா முதலியனவும் செய்வித்தனன். இறைவன் திருப்பெயர் பிரமபுரிநாதன் என்றும், தலப்பெயர் பிரமபுரம் என்றும் தீர்த்தம் பிரமதீர்த்தமென்றும் வழங்குமாறு செய்தனன். முன்பு தேற்றுவனம் என வழங்கிய இத்தலம் பிரமபுரம் பிரமதபோவனம் என்று வழங்கியது. பிரமனுக்குப் பெருமான் ஞானமருளி படைத்தல் தொழிலைச் செய்யுமாறு வரங்கள் பலவும் அருள் செய்தனன்.

உலகில் உயிர்கள் படைக்கப்படும் முன்பே இத்தலத்தில் உள்ள பெருமான் பிரமனால் எழுந்தருளுவிக்கப் பெற்றார் என்ற உண்மை புராண வரலாற்றில் அடங்கியுள்ளது.

பாண்டவர் வழிபட்டது:- பாண்டவர் நாடிழந்து வேத்ரகீயம் என்ற ஊரை அடைந்தனர். பாண்டவர்கள் தங்களை அந்தணச் சிறுவர்களாக உருமாற்றிக்கொண்டு அடைந்த பொழுது அவ்வூர் அந்தணர்கள் அவர்களை விருந்தினர்களாக வரவேற்றனர். பாண்டவர் ஐவரும் ஒருஅந்தணரது இல்லில் விருந்தினராய் அமர்ந்தனர். வேத்ரகீயத்தின் ஊர்ப்புறத்தே பகாசுரன் என்ற ஒரு அசுரன் வாழ்ந்து

வந்தான். அவன் அவ்வூருள் புகுந்து மக்களைக் கொன்று தின்றான். இதனைக்கண்ட அவ்வூரார் அவ்வசுரனை அணுகி வணங்கி, ஐய! இப்படி இவ்வூரைத் தாங்கள் அழிக்க வேண்டாம்; முறைவைத்து ஒருவீட்டிற்கு ஒருவராய் நாள் தோறும் வந்து உனக்குப் பலியாகின்றோம். அப்படி வரும் பொழுது ஒருவண்டிநிறைய உணவினையும் கொண்டு வருகின்றோம் என்று வேண்டினர். பகாசுரனும் அதற்கு இசைந்தான். இந்த முறைப்படி பாண்டவர் வாழ்ந்த அந்தணர் வீட்டு முறை ஒருநாள் வந்தது, அன்று பிரதை என்ற இல்லக்கிழத்தி பகாசுரனுக்கு இரையாகத் தன் வீட்டிலிருந்துயாரை அனுப்புவதுஎன்று அறியாதுதிகைத்து அழுதுகொண்டிருந்தாள். இவள் நிலையினை அறிந்த குந்தி அந்தணச்சிறுவன் வடிவிலிருந்த வீமனை அனுப்ப ஒருப்பட்டாள். வீமனும் அவ்வாறே ஒருவண்டி நிரம்பிய உணவுடன் பகாசுரன் இருக்குமிடம் நோக்கிச் சென்றான். பகாசுரனுக்கும் வீமனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. முடிவில் பகாசுரன் கொல்லப்பட்டான். இதனால் வேத்திர கீயமக்கள் கவலையற்று வாழ்ந்தனர்.

கொலை செய்தவர்களைப் பற்றிக்கொள்ளும் பிரம ஹத்தி பீமனையும் பற்றிக்கொண்டது. பீமன் இக்கொலைப் பாவத்தை நீக்கி அருள் செய்பவன் கோளிலிப் பெருமானே என்று எண்ணி இத்தலத்தை அடைந்து சந்திர நதியில் ஸ்நானம்செய்து தன் துணைவர்களோடு கோளிலித் திருக்கோயிலுக்குள் புகுந்தனன். பீமனைப் பற்றியிருந்த பிரமஹத்தி நீங்கியது. பாண்டவர்கள் ஐவரும் மகிழ்ந்து கோளிலிப் பெருமானை வணங்கி இன்புற்றனர். இந்த பகாசுரனைக் கொன்றதனால் தன்னைவந்து பற்றிய பிரம்ம ஹத்தி தோஷத்தைவீமன் திருக்குவளையில் வந்துவழிபட்டுப் போக்கிக் கொண்டான் என்பது வரலாறு.

## சுந்தரர் நெல் மலையை எடுத்துச்செல்ல ஆள் பெற்றது :

மாதவம் செய்த தென்திசை வாழத் திருவவதாரம் செய்து தம்பிரான்தோழராய், தேசமுய்யத்திருத்தொண்டத் தொகை பாடித் திருவாரூரில் ஒருத்தர் கழல் முப்பொழுதும் உருகிய அன்பொடு பணிந்து பெருத்தெழு மெய்யன் பினுல் பிரியாது அங்கு உறைந்தார் சுந்தரர். அந்நாளில் சுந்தரரிடத்துப் பேரன்பு பூண்டவராய் அவருக்குச் செந் நெல் அரிசி பருப்பு முதலிய பண்டங்களை நெடுநாட்களாகத் தவருமல் கொடுத்துத் தொண்டு செய்துவந்தார் குண்டை யூர்க்கிழார் என்னும் வேளாளர். ஒருசமயம் மழையில்லாத தால் விளைவு குன்றியது. அதனுல், நெல் அனுப்பமுடியாமல் மனம் வருந்தி அன்று உண்ணுது துயில்கொண்டார். சிவ பிரான் அவர் கனவில் தோன்றி "ஆரூரனுக்காக உனக்கு நெல்தந்தோம்" என்று அருளிச்செய்து குண்டையூர் முழு தும் நெல்மலையாகச் செய்தருளினுன். குண்டையூர்க்கிழார் மகிழ்ந்து இச்செய்தியைச் சுந்தரரிடம் தெரிவித்தார். சுந்தரர் குண்டையூர்சென்று நெல்மலையைக்கண்டு வியந்து கோளிலிக்கு வந்து குண்டையூர்க்கிழார் அளித்த நெல்லைத் திருவாரூர்க்கு எடுத்துச் செல்ல ஆள் வேண்டுமென்று அன்போடு "நீளநினைத் தடியேன்" என்று தொடங்கி ஒவ்வொரு திருப்பாடலிலும் ஆள் வேண்டுமென்பதை விண்ணப்பித்துத் திருப்பதிகம் பாடினுர். அன்றிரவே நெல்மலை முழுவதும் சிவபிரான் திருவருளால் திருவாரூருக்குக் கொண்டுவந்து சேர்ப்பிக்கப்பட்டது, பரவையார் கட்டளைப்படி திருவாரூரில் உள்ளவர்கள் அந்நெல்மலையை வாரி எடுத்து வைத்துக்கொண்டு வன்றொண்டர் புகழ் பாடிப்பணிந்து சுகமாய் வாழ்ந்தார்கள்." இந்நிகழ்ச்சியை இத்தலத் திருப்பதிகத்துள் காணலாம்.

"கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் [பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே"

இத்தொடர் சுந்தரர் திருப்பதிகத்தில் முதல் திருப்பாடலில் உள்ளது. ஒவ்வொரு பாடலிலும் "அட்டித்தரப்பணி" என்று வேண்டுகிறுர் சுந்தரர்.

## முசுகுந்தன் தியாகேசரைப் பிரதிட்டித்தது :

திருவாரூரைத் தலைநகராகக்கொண்டு முசுகுந்தன் என்னும் சோழமன்னன் அரசாண்டுவந்தான். இவன் முற்பிறப்பில் கயிலையங்கிரியில் குரங்காக இருந்து பெருமானைப் பூசித்து இறைவனுணைப்படி அவதரித்தவன். இந்திரனுக்கு மிக நட்பினன். வலன் என்னும் அசுரன் வானுலகை எதிர்த்தபோது தேவேந்திரன் முசுகுந்தனைத் துணைகொண்டு வலனை வென்றனன். வெற்றி பெற்ற இந்திரன் முசுகுந்தனுக்கு வரிசையளித்து நிலவுலகிற்கு அனுப்ப எண்ணிய இந்திரன், 'என்னிடம் வேண்டியது யாது? கேள்' என்றுன். முசுகுந்தனுக்குமட்டும் தியாகேசர் காட்சி தந்து என்னைத் திருவாரூருக்குக் கொண்டுசெல்; பூசனைசெய் என்று கூறியபடி, முசுகுந்தன் 'நீவழிபடும் தியாகேசனைத் தருக' என்று கூறினன். இந்திரன் தன் ஆன்மார்த்த மூர்த்தியைக் கொடுக்கமனமின்றி, 'இம்மூர்த்தி திருமாலின் நெஞ்சகத்து எழுந்தருளியிருந்து உச்சுவாச நிச்சுவாசத்தால் அசைந்தாடியிருந்தவர்; திருமால் இம் மூர்த்தியை எனக்குத் தந்தார். அவர் இசைவு பெற்றன்றி இம் மூர்த்தியைத் தரலாகாது' என்று கூறி அவரிடம் இசைவு பெற்று வந்து தியாகேசரைப்போல ஆறு திருவுருவங்களைச் செய்வித்து முசுகுந்தனிடம் காட்ட, முசுகுந்தன் உண்மையான உருவைத் திருவருள் கைகூட்ட உணர்ந்து சுட்டிக்காட்டிக் கேட்டனன். இந்திரன் செய்வதொன்றறி

யாது திகைத்துத் தியாகேசனேடு ஏனைய தியாகமூர்த்தங்களையும் அளித்துத் 'திருவாரூர் முதலிய சிவ தலங்களில் வைத்துப் பூசிக்க' என்றனன். முசுகுந்தன் அவ்வாறே தியாகேசனைத் திருவாரூர்த் திருக்கோயிலில் தனி விமானமெடுத்துப் பிரதிட்டித்து ஏனைய ஆறு மூர்த்திகளையும் திருக்கோளிலி, திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காருயில், திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய தலங்களில் ஒரே நாளில் ஸ்தாபித்து வழிபாடு செய்வித்தான். அவை சப்தவிடங்கத்தலம் எனப்படும்.

சீரார் திருவாரூர் தென்னுகை நள்ளாறு
காரார் மறைக்காடு காருயில் — பேரான
ஒத்த திருவாய்மூர் உகந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

அவ் ஏழு திருவுருவங்களுக்கும் ஏழு பெயர்களும் ஏழு வகை நடனங்களும் சொல்லப்படுகின்றன.

திருவாரூர் - வீதிவிடங்கர் - அஜபா நடனம்
திருக்கோளிலி - அவனிவிடங்கர் - பிரமர நடனம்
திருநள்ளாறு - நகவிடங்கர் - உன்மத்த நடனம்
திருநாகைக்காரோணம் - சுந்தர விடங்கர் - பாராவாரதரங்க நடனம் - வீசி நடனம்
திருக்காருயில் - ஆதிவிடங்கர் - குக்குட நடனம்
திருவாய்மூர் - நீலவிடங்கர் - கமல நடனம்
திருமறைக்காடு - புவனிவிடங்கர் - ஹம்சபாத நடனம்,

திருவாரூர்த்தியாகேசர், ஆடும் நடனம் அஜபாநடனம் எனப்பெறும். ஜபிக்கப்பெருத நடனம் என்பது இதன் பொருள். மந்திரங்களை ஓதும் பலமுறைகளில் மானசீகமாக உச்சரிப்பது ஒரு முறை. இந்தமுறையில் திருமால் தியாகராஜப் பெருமானைத் தமது மார்பகத்தில் வைத்துப் பூசித்த ஞான்று மானசீகமாகப் பெருமானது திருப்பெயரை

உச்சரித்த காலத்தில் நடன மாடிய முறையையே இது குறிக்கின்றது. உள்மூச்சு வெளிமூச்சுகளால் மார்புக்கூடு ஏறி இறங்குவதாலும், அம் மூச்சு உள்ளும் புறமும் முன் பின்னாக இயங்குவதாலும் அஜபா நடேசராகத் திருமாலின் இதய கமலத்தில் அமர்ந்து ஸ்ரீ தியாகராஜர் மேலும் கீழுமாக ஏறியிறங்கியும், முன்னும் பின்னுமாகச் சென்று வந்தும் ஆடிய ஆட்டம் இப் பெயர் பெறுவதாயிற்று. இவ்வரிய காட்சியினை இன்றும் திருவாரூரை அடைந்து ஸ்ரீ தியாக ராஜப் பெருமான் ஆடுங்காலங்களில் கண்டு களிக்கலாம். திருநள்ளாற்றில் உன்மத்த நடனத்தைக்காணலாம். இந்த நடனம் பித்தன் தலைசுற்றி ஆடுவதுபோல் நிகழ்வதொன்றாகும். நாகையில் பாராவார தரங்க நடனத்தைக் காணலாம். இது கடல் அலையின் அசைவை ஒத்துள்ளது. திருக்காறாயிலில் குக்குட நடனத்தைக் காணலாம். இது கோழியின் ஆட்டத்தை ஒத்தது. திருக்கோளிலியாகிய இப்பதியில் ஸ்ரீ தியாகராஜப் பெருமான் பிருங்க நடனம் ஆடுகின்றார். வண்டு மலர்களுக்குள் குடைந்து ஆடிச்செல்வது போன்ற காட்சியை இந்நடனத்தில் காணலாம். திருவாய்மூரில் நிகழ்வது கமல நடனம். நீர் நிறைந்த தடாகத்தே ஒற்றைத் தாளில் நிற்கும் தாமரைப்பூ காற்றால் தள்ளுண்டு மெல் லென ஆடுவது போன்ற இனிய காட்சி இங்குதான் உள்ளது. திருமறைக்காட்டில் ஹம்சபாத நடனம் நிகழ் கின்றது. இது அன்னப் பறவை அடிபெயர்த்துவைத்து ஆடுவது போன்ற தோற்றத்தினை உடையது.

## தலப் பெயர்கள் :

பிரமதேவன் சிருஷ்டித் தொழிலைப் பெறவேண்டிப் பூசித்தமையால் பிரமதபோவனம் எனப் பெயர்பெறும். மற்றும் கதகாரண்யம் ( தேற்றாமரவனம் ), புஷ்பவனம், தென்கயிலை என்னும் பெயர்களும் உள்ளன. நவக்கிரகங் கள் முதலியோர்க்கு உளதாய குற்றங்களை நீக்கி அருள்

புரிந்தமையால் கோளிலி என்னும் பெயர் பெற்றது. தற்போது திருக்குவளை என மருவி வழங்கப்பெறுகிறது. விடங்கத்தலம் ஏழில் இது அவனிவிடங்கத்தலம்.

## மூர்த்திகள் :

இறைவன் - பிரமபுரீசுவரர். அம்மை - வண்டமர் பூங்குழலாள். தியாகமூர்த்தியின் திருநாமம் ஊழிப்பரன், அவனிவிடங்கத் தியாகர் என்பன. அம்பிகை நீலோத்பலாம்பாள். விநாயகர் தியாக விநாயகர். முருகப்பெருமான் திருநாமம் சுந்தரவடிவேலர்.

## ஆலய அமைப்பும் மூர்த்திகளும் :

ஆலயம் இத்தலத்திற்கு நடுவண் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி, கீழ்புறம் திருக்கோயிலின் நுழைவில் இராஜகோபுரம் அணிசெய்கிறது. திருக்கோயிலின் எதிரே பிரமதீர்த்தம் உள்ளது. இராஜகோபுரத் திருவாயிலில் நுழைந்தவுடன் வெளிப் பிராகாரம். வடபுறம் வசந்த மண்டபம் உள்ளது. சந்நிதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள துவஜஸ்தம்பம் நிற்கிறது. இதையடுத்து இரண்டாங்கோபுரத் திருவாயில்.

இரண்டாம் கோபுரத்தில் நுழைந்தவுடன் உள்பிராகாரம் எதிரே சுவாமி சந்நிதி. தென்புறம் தியாகேசர் சந்நிதி. எதிரே சுந்தரர் பெருமான் உற்சவ மூர்த்தியாகப் பரவை நாச்சியாருடன் எழுந்தருளியுள்ளார். பிர்ாகாரத்தை வலம் வரும்போது நிருதிதிக்கில் (தென்மேற்கில்) பிரதான விநாயகராகிய தியாகவிநாயகர் சந்நிதி. அதை அடுத்து விசுவநாதர் (இலிங்க வடிவம்). அடுத்து வாகன அறை. விசாலாட்சி, இந்திரபுரீசர், சந்திரலிங்கம். அதையடுத்து முருகனது தனித் திருக்கோயில். பக்கத்தில் வடபுறமாகச்

சொக்கலிங்கம், அண்ணுமலேயார் இலிங்க வடிவங்கள், அடுத்து நால்வர், மகாலக்ஷ்மி ஆகிய மூர்த்திகள் உள்ளன. அம்மையார் திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் தனித் திருக்கோயிலாயுள்ளது. ஈசான திசையில் சபாநாதர் உயர்ந்த உருவத்தில் மிக அழகராய் விளங்குகிருர். அதையடுத்து மேற்புறம் நவக்கிரகங்கள் ஒருமுகமாகத் தென் திசையை நோக்கி விளங்குகின்றன. சுவாமி கர்ப்பக்கிருஹம் வடபுறம் அர்த்த நாரீஸ்வரர் பிர்மா, துர்க்கை உமாமகேசர் வடிவங்களும் சுவாமி கர்ப்பக்கிருகத்தின் தென்பகுதியில் உள்ள தேவகோஷ்டங்களில் முறையே நடராஜர், நர்த்தன கணபதி, பிக்ஷாடனர், தக்ஷிணமூர்த்தி ஆகிய மூர்த்திகளும் இருக்கின்றன. மேல்புறம் சங்குசக்கிர தாரியாய்த் திருமால் உருவமொன்றும் இருக்கின்றது.

பிராகாரத்தின் கீழ்புறம் திருமாளிகைப்பத்தியில் சந்திர சூரியர் முதலிய உருவங்களும் உள்ளன. இரண்டாம் கோபுரத்தில் தென்புற மதிலில், பஞ்சபாண்டவர் பூசித்து வழிபடும் கோலமும் பிரமன் பூசிப்பதும் கல்லில் பொறிக்கப் பட்டிருக்கின்றன.

சுவாமி கோயிலுக்கும் அம்பாள் கோயிலுக்கும் நடுவில் அகத்தியர் பூசித்த இலிங்கம் ஒன்று உள்ளது. அது தனி கர்ப்பக்கிருக அர்த்தமண்டபத்துடன் இருக்கிறது. சண்டேசர் திருக்கோயிலும் உள்ளது.

சுவாமி சந்நிதியில் தலத் திருப்பதிகங்கள் பொறிக்கப் பெற்றுள்ள சலவைக்கற்கள் இருபுறமும் பதிக்கப்பெற்றுள்ளன.

## தீர்த்தங்கள்

ஆலயத்திற்கு வடபுறம் மிக்க அணிமையில் புனிதமும் புண்ணியமும் வாய்ந்த முத்தி நதியாகிய சந்திர நதி கிழக்கு நோக்கிச் செல்கின்றது. கோயிலுக்கு எதிரே பிரமதீர்த்தம்

உள்ளது. தென்புறம் இந்திர தீர்த்தமும், மேல்புறம் அகத்தியர் தீர்த்தமும் உள்ளன. தென்மேற்கு மூலையில் சிவலோக விநாயகர் கற்றளியின் அருகில் விநாயகதீர்த்தம் உள்ளது. ஆலயத்தில் அம்மன் சந்நிதியில் சத்திதீர்த்த மென்று ஒரு கூவல் உள்ளது. மிகப் புனிதமானது; இது தான் அபிஷேகம் முதலியவற்றிற்குப் பயன்படுகிறது.

## புறக் கோயில்கள் :

தென்மேற்கு மூலையில் சிவலோக விநாயகர் வீற்றிருக் கின்றார். இவர், ஹேமகாந்த மகாராசாவுக்குச் சிவலோகம் காட்டியவர். கோயிலுக்குத் தெற்கே வரதராஜப்பெரு மாள் கோயில் இருக்கிறது. அருகில் தெற்கு வீதியில் அங்காளம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. கீழ்புறம் மாரியம்மன் கோயில் உள்ளது.

## வழிபட்டோர் :

பிரமதேவர், திருமால், இந்திரன், அகத்தியர், முசுகுந்தன், பஞ்சபாண்டவர்கள், நவக்கிரகங்கள், ஹேம காந்த மன்னன் உள்ளிட்ட பலர் பூசை செய்தும் வழிபட்டும் எண்ணிறந்த வரங்கள் பெற்றுள்ளனர்.

## சுற்றியுள்ள தலங்கள் :

வடபால் மிக அருகில் குண்டையூரும், வலிவலமும், தெற்கே எட்டுகுடியும், மேற்கில் கைச்சின்னமும், கிழக்கில் சந்திர தீர்த்தம் கடலொடு சங்கமம் ஆகும் இடமாகிய காமே சுரமும் இருக்கின்றன. அது ஸ்நானகட்டமாக விளங்கு கிறது. தை, ஆடி, மகாளயபக்ஷ அமாவாசைகளில் இங்கு மக்கள் பலர் கூடி ஸ்நானம் செய்து வருகின்றனர்.

## விழாக்கள் :

மாசிமாதத்து மகநாளில் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குப் பூதங்கள் நெல் அட்டிச் செல்லும் திருவிழா மூன்று நாட்களும் பக்த உற்சவமாக நடைபெறுகிறது. மார்கழித் திங்களில் ஆருத்ரா தரிசனமும், தியாகராஜப்பெருமான் வசந்த மண்டபத்தில் காட்சியளித்தலும் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை நான்கிலும் பிரம தீர்த்தத்தில் தீர்த்தம் அளிக்கப்படுகிறது.

திருக்குவளை ஸ்ரீ தியாகேசப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடாக முசுகுந்தார்ச்சனை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் தொடங்கப்பெற்று ஆண்டு தோறும் நடத்தப் பெறுகிறது. வசந்த உற்சவமும் நடைபெறுகிறது. தைப் பூசத்தில் இந்திர தீர்த்தத்திலும், மார்கழியில் அகஸ்த்திய தீர்த்தத்திலும், மாசிமகத்தில் சந்திர தீர்த்தத்திலும் தீர்த்தங் கொடுத்தருளல் நிகழ்கிறது. பொதுவாக எல்லாத்திருக் கோயில்களிலும் மூலவருக்குப் பிரதிநிதியாக சோமாஸ் கந்தர் புறப்படுவதுபோல தியாகராஜ ஸ்தலங்களில் தியாகராஜரின் பிரதிநிதியாக சந்திரசேகரர்புறப்பாடாவது குறிப்பிடத்தக்கது.

## தலத் திருப்பதிகங்கள் :

திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கைச்சினம், வலிவலம் முதலிய தலங்களை வழிபட்டுத் திருக்கோளிலிக்கு எழுந்தருளினர். பெருமான் கோள்களின் தீமையைப் போக்கி ஆட்கொள்வான் என்ற குறிப்புப்பட கோளாய நீக்குமவன், கோடரவம் நீக்குமவன் என்று குறிப்பிட்டு, நாளாயபோகாமே; நஞ்சணியுங்கண்டனுக்குஆள்செய்தால் நம்கிளைகிளைக்கும் என்ற கருத்தமைந்த முதல் திருப்பாட்டுத் தொடங்கித் திருப்பதிகம் பாடி யருளியுள்ளார்கள். இப் பதிகத்தில் இறைவன் மார்க்கண்டற்காகக் காலனைக் காய்ந்

தது, சண்டீசர்க்கு அருள் செய்தது. பாண்டவர்கள் இத் தலத்தில் வழிபட்ட குறிப்புத் தோன்ற அர்ச்சுனற்குப் பாசுபதம் ஈந்தது, நமிநந்தி அடிகட்கு அருள் செய்தது, இராவணற்கு வாள் ஈந்தது, பாணபத்திரற்கு அருள் செய்தது முதலிய சரித்திரக் குறிப்புக்களை அமைத்துள் ளார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த திருக்குறுந் தொகைத் திருப்பதிகங்கள் இரண்டு இத் தலத்திற்கு உள்ளன. இவர்களும் கோளிலிப் பெருமானைத் தொழ அல்லல் நீங்கும், வினை நாசமாகும். அல்லல் இல்லை என்று குறிப்பிடுகிறுர்கள். பதிகத்தில் உபமன்யு முனிவர்க்குப் பாற்கடலீந்த வரலாறு கூறப்படுகிறது. இரவும் பகலும் கோளிலிப் பெருமானைப் பாடிப் பரவுவார்க்குச் சிவகதி கைகூடும் என்று கூறித் தொழாதொழிந்த காலத்தை எண்ணியும் இரங்கிக் கூறியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்பங்குனி உத்திரத் திருநாளில் சுந்தரர் மாளிகைக்கு நெல்லனுப்ப இயலாது வருந்திய குண்டையூர்க்கிழாருக்கு இறைவனருளால் நெல்மலை கிடைத்தது, கிடைத்த நெல்மலையை சுந்தரர் கோளிலி யப்பரை வேண்டி ஆள்பெற்றுத் திருவாரூருக்குக் கொணர் வித்தார். ' குண்டையூரில் சில நெல்லுப்பெற்றேன் ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித்தரப்பணி என்ற குறிப்புப் பல பாடல்களிலும் அமைய, நீள நினைந்தடியேன் என்று தொடங்கிப் பதிகம் பாடி யருளியுள்ளார்கள்.

## பிற நூல்கள் :

பரணர் திருவந்தாதி :- பதினொராம் திருமுறையில் பரணர் பாடிய திருவந்தாதியில் சிவ தலங்கள் பலவற்றுள் ஒன்ருக இத்தலம் குறிக்கப்படுகிறது. சங்ககாலப் பரணரும்

இவரும் ஒருவரா அல்லது வேரு என்பது ஆய்வுக்குரியது. இவர் பிற்பட்டவர் என்றே ஆராய்ச்சியாளர் துணி கின்றனர்.

கரையெனும் மாதர் கருவான சேருக்
கரையெனும் மாதர் கரையாம் — கரையெனுங்
கோளிலியெம் மாதி குறிற்பரவ வல்லேயே
கோளிலியெம் மாதி குறி.

தியாகராஜசுவாமி உலா:- இயற்றியவர் பெயர் தெரிய வில்லே. இதன் நடையழகு சிறந்த புலவர் இயற்றியது என்பதைத் தெரிவிக்கிறது. தியாகேசர் திருவீதி உலா வருவதை அடிப்படையாக வைத்து அகப்புறத்துறையாகப் பேதை முதல் பேரிளம் பெண்வரை ஏழ்பருவ மகளிரும் அப் பெருமானைக் காதலிப்பதாகப் புனைந்துரைக்கப் பெற்றுள்ளது. தலச் சிறப்பும் தியாகேசன் பெருமையும் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. உலா, பாடிய காலத்து ஸ்ரீமத் சிதம்பரநாதத் தம்பிரான் சுவாமிகள் கட்டளை விசாரணை யாக இருந்த செய்தி இடையிடையே குறிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டுக்கள்

இக்கோயிலைப்பற்றிய கல்வெட்டுக்கள் 19 உள்ளன. அவற்றுள் பிற்காலச் சோழ பாண்டியர்களான சடாவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகரபாண்டியன், இராஜராஜன், இராஜாதிராஜன், மூன்ரும் குலோத்துங்கன், மூன்ரும் இராஜேந்திரன் முதலிய சோழ பாண்டிய அரசர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் அமைந்துள்ளன.

தலம் :

திருக்கோளிலி எனவழங்கும் இத்தலம் ராஜேந்திர சோழ வளநாட்டு இடையளநாட்டு வெண்டாழை வேளூர்க் கூற்றத்துக்கு உட்பட்டதாய் இருந்தது.

## மூர்த்திகள் :

இறைவன் திருக்கோளிலி உடையார். திருக்கோளிலி உடைய நாயனுர் என்றும் வழங்கப்படுகிருர். தியாகேசர் அவனிவிடங்கத் தியாகர் என வழங்கப்படுகிருர்.

## திருப்பணி

வடவல்லத்தை இருக்கையாக உடைய இருன்குடியான் இந்திராவதி நல்லூர் உய்ய வந்தான் சீகாழிப் பிள்ளையான ஜயதுங்கவன்மன் மகாமண்டபந் தொடங்கிக் கீழவாசல் வரையும் திருப்பணி செய்தான். விளக்குகளுக்கு நிலம் விட்டான். இப்பணி சடையவர்மன் சுந்தர பாண்டியன் 1251–1258 காலத்ததாகும். வடவல்லமும் இருன்குடியும் திருக்குவளைக்கு வடபால் நான்குமைல் தூரத்தில் உள்ளன. இருன்குடி, இக்காலத்து இறையான்குடி என வழங்குகிறது. சந்திர நதிப்பெருக்கால் இத் தலத்து வட எல்லை அழிந்துபட்டதாகவும் மீளவும் பாலைக்குறிச்சி உடையான் திருமறைக்காட்டுடையான் சீர்திருத்தினுன் என்று தெரிகிறது. பாலைக்குறிச்சி என்னும் ஊர் திருக்கோளிலிக்கு வடக்கே சுமார் ஐந்துமைல் தூரத்தில் இருக்கின்றது.

இத்திருக்கோயிலுக்கு வடக்கே அழகிய வீதி ஒன்று உள்ளது. இவ்வீதி எடுப்பிக்கப்பெற்ற காலம் கோச்சடையபன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர் அரியணையேறிய எட்டாவது ஆண்டு வைகாசி மாதத்து இருபத்தொன்பதாம் தேதியாகும். அதாவது கி. பி. 1256 ஆம் ஆண்டாகும். எனவே இக்கோயிலின் வடக்குத் திருவீதி எடுப்பிக்கப்பெற்று இற்றைக்கு எழுநூற்றைந்து ஆண்டுகள் ஆகின்றன. இத் திருவீதிக்குத் திருமறைக்காடன் திருவீதி என்ற பெயரும் வைக்கப் பெற்றுள்ளது,

சுந்தரபாண்டிய தேவரின் யாண்டு 15 வதில் வல்லத்து இருன்குடியான் சேரனை வென்ற பாண்டிய தேவனுக்குப் பிரமாணம்பண்ணித் திருக்கோளிலி உடையார்க்கு பஞ்சத்திரவியம் ஆடியருளுதற்காக ஸ்ரீபண்டாரத்து 100 பொன் அளித்தான். ஆண்டு எட்டாவதில் பாலைக்குறிச்சியுடையான் திருமறைக்காடுடையான். வயிராதிராயன் சந்திரமௌலிப் பேராற்றுப் பெருக்கால் அழிந்தவடக்குத் திருவீதியைச் செப்பனிட்டு ஆற்று வடகரைதென்கரையும் சீர்த்திருத்திக்கொடுத்தான் என்பன கல்வெட்டுத்தொடர்.

## சிற்பம்

இரண்டாங் கோபுரத்தின் தென்பக்கத்துக்கீழ் மதிலில் குந்தி, திரௌபதை, நகுலன், அர்ச்சுனன் சகாதேவன், பிரமன், பிரமபுரீசுவரர் இவர்களுடைய திருவுருவங்கள் பெயர்க்குறிப்புடன் காணப்படுகின்றன. தல விருக்ஷமாகிய தேற்றுமரமும் அதில் செதுக்கப்பட்டுள்ளது. அது வன்றிப் பகாசுரனுடைய உருவமும் கோபுரத்தில் இருக்கிறது. செம்படவர்களில் ஆலன் என்பவன் அதிபத்த நாயனர் திருவுருவத்தை எழுந்தருளுவித்து அதற்கு அமுதுபடிக்காக இரண்டாயிரத்துநூறு காசைத் தாமோதரப்பட்டன் பக்கல்கொடுத்து இத்தருமம்முட்டின்றி நடைபெற ஏற்பாடு செய்தான். இவ்வறக்கட்டளை இராஜராஜதேவனின் நான்காமாண்டில் நிறுவப்பட்டது. சிவம் படவர் என்ற சொல்லே செம்படவர் என்றாகியிருக்கலாம்.

## நுந்தாவிளக்கு (தூண்டா விளக்கு)

இராஜாதிராஜன் ஆட்சி 10 ஆவது யாண்டில் பழையனூர் நாட்டு பழையனூருடையான் வேதவனமுடையான் நுந்தாவிளக்குக்காக 100 காசு அளித்தான்.

குலோத்துங்கசோழதேவரின் இருபதாம் ஆண்டில் கோளிலி உடையார்க்கு, திருச்சாட்டியக்குடியுடையார் திருமடைவிளாகத்து இருந்த ஒருவர் திருநுந்தாவிளக்கு எரிப்பதற்கு இக்கோயில் முப்பதுவட்டத்துக்காணியுடைய சிவப்பிராமணர்களிடம் எண்ணூறு காசைக் கொடுத்துள்ளார்.

பிற கட்டளைகள் ;

சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251—1258) ஆட்சி 18-வது ஆண்டில் இவன் பிறந்த நாளாகிய திருவாதிரை தோறும் அரசர்க்கு நன்று உண்டாகப் பெருமானும் நாச்சியாரும் சிறப்பமுது செய்தருளித் திருவுலாப் போதவும் ஆளுடையபிள்ளையார் திருநாளமுது செய்து திருவுலாப் போதவும் தேவாரம் அருளிப் பாடவும், நிலம் வாங்கி அளித்தான்.

வீரராஜேந்திரன் (கி.பி. 1262) 7-வது ஆட்சியாண்டில் இராஜேந்திர சோழவளநாட்டுடையார் திருக்கோளிலி உடையார்க்கு வெண்டாழை வேளூர்க் கூற்றத்துப் பெரிய உடையார் திருநுந்தாவிளக்குக்கு எண்ணெய்க்காக 135 காசு அளித்தான். யாண்டு 30-ஆவதில் பாலைக்குறிச்சியுடையான் திருமறைக்காடுடையான் தான் பிறந்த நாளாகிய கேட்டை நாளில் பெருமான் திருவுலாப்போத அமுதுபடி, சாத்துபடி, திருப்பள்ளித்தாமம், திருவிளக்கெண்ணெய் உள்ளிட்டவற்றிற்கும் சீபாதந் தாங்கவும் திருப்பள்ளித்தொங்கல் எடுக்கவும் பிறவற்றிற்குமாக நிலம் $5\frac{1}{2}$ காணி அளித்தான். பாண்டிகுலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து நாடுகிழான் அழகிய திருநாமத்துக் காணியாகத் தேவதானம் அளித்தான்.



திருக்குளமும், கோயிலும்

குலசேகரபாண்டியனின் ஆட்சி யாண்டு 31 ஆவதில் சித்தமல்லி வள நாட்டு பாம்புணிக் கூற்றத்து பொன்னி நல்லூருடையான் சீராமதேவன் திருக்கோளிலி உடைய நாயனுருக்கு இரண்டு நுந்தாவிளக்கிட விளக்குப் புறமாக நிலம் அளித்தான்,

## பிற செய்திகள் :

திருக்கோளிலி என்னும் இவ்வூர், குலசேகரபாண்டியன் கல்வெட்டில் இருமரபுந்துய்ய பெருமாள்புரம் என்னும் வேறு பெயரையும் பெற்றிருந்தது. இச் செய்தி "இ கோளிலி ஆன இருமரபுன்துய்ய பெருமாள்புரத்துக் கல்யாணபுரங்கொண்டானுற்றுக்கு வடகரைப்பட்ட நிலத் துக்குக் கீழ்பாற்கெல்லை" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

இவ்வூரில் மாகேஸ்வரவிண்ணகர எம்பெருமான் கோயில் ஒன்று உண்டு என்பதை, சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியதேவர் கல்வெட்டு உணர்த்துகிறது. இச்செய்தி "கோளிலி உள்ளூரில் மாகேஸ்வர விண்ணகர எம்பெருமான் திருவுடையாட்டத் துக்கு மேற்கு" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. இப்பெருமான் இக்காலம் வரதராசப் பெருமாள் என்னும் பெயருடன் திகழ்கின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் குறிப்பிடப்பெற்ற குண்டையூர், இக் கோயிலில் உள்ள கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது, அக் குண்டையூரில் உள்ள குண்டையூர் உடைஈஸ்வரமுடையார் கோயிலும், மூன்றும் இராசேந்திர சோழன் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளது.

இரண்டாம் கோபுரத்தைக் கட்டுவித்தவன் தவலோக நாதன் என்பவன் ஆவன். இச் செய்தி அக்கோபுரத்தில்

உள்ள "நவலோகபாலன் கயிலாயன் வல்லை நரேசன் சற்றே அவலோகனத்தில் விடைகொடுத்தான் கலித்தட பொழுதே தவலோகநாதன் திருப்பணி" என்னும் கல்வெட்டுப் பாடல் பகுதியால் கொள்ளக்கிடக்கின்றது.

இவ்வூரில் திருஞானசம்பந்தர்க்குத் திருமடம் ஒன்று இருந்தது. அதற்கு 120 கலம் நெல் வருவாய் உள்ள ஒரு வேலி நிலம் கொடுக்கப்பட்டிருந்தது.

## நிர்வாகமும் திருப்பணியும்

இத் திருக்குவளைத் திருக்கோயில் தருமையாதீனத்தின் இருபத்தேழு திருக்கோயில்களில் ஒன்ருய் இலங்குகிறது. இத்தலத்தின் பரம்பரைத் தருமகர்த்தா தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் செம்மையாகப் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

8—6—1930 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றுள்ளது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாட்சிக் காலத்தில் பல திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகமும் செய்விக்கப் பெற்றுள்ளது.

இராஜகோபுரம், இரண்டாம் கோபுரம். விமானங்கள் புதுப்பித்து சுதைவேலைகள் செய்து வர்ணம் வைக்கப்பட்டது. விமானங்கள், மண்டபங்கள், மேல் தளங்கள், மதில் சுவர்கள் முதலியன பழுதுபார்த்து வெள்ளைவைத்து மஞ்சக்காவி அடிக்கப்பட்டது. உட்பிராகாரங்கள், கீழ வெளிப் பிராகாரத்தின் கிழக்குப்பகுதி கோபுரவாசல் முதலிய இடங்களில் கருங்கல் தளவரிசை இடப்பட்டது. விமான கலசங்கள் செம்பில் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. திருக்குளம் படித்துறை கருங்கல்லில் கட்டுவிக்கப்

பட்டது. பக்கச் சுவர்கள் கட்டி, சேறு அள்ளி, திருக்குளம் திருப்பணி செய்யப்பட்டது. அம்பாள் கோயில் மகா மண்டபம் செங்கல்லாக இருந்ததை அப்புறப்படுத்தி கருங்கல்லில் கட்டப்பெற்றது.

திருக்குளத்தின் மேல்புறம் உள்ள தென்னந்தோப்புக்கு சுற்றுச் சுவர் கட்டப்பட்டது. நந்தவனம் திருத்தி தண்ணீர் இறைக்க யந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்குக் குடிநீர் வழங்கத் தாமியங்கிக் குழாய் வைக்கப்பட்டிருக் கிது. வசந்த மண்டபம் முன்புறம் தகரக் கொட்டகை அமைக்கப்பட்டிருக்கிறது. இத் தலத்துத் திருமுறைப் பாடல்கள் சலவைக் கல்லில் பொறித்து பதித்து வைக்கப் பட்டிருக்கின்றன. தேரடிப் பிள்ளையார் கோயில் இடித்துக் கட்டப்பட்டிருக்கிறது. கோயில் சிப்பந்திகள் குடியிருப் புக்கு வீடு ஒன்று வாங்கப்பட்டது, ஒரு வீடு புதிதாக கட்டப்பட்டது. ஸ்ரீ தியாகராஜாவுக்கு வெள்ளியில் மஞ்சமும், ஸ்ரீ விடங்கருக்கு வெள்ளியில் பெட்டகமும் செய்யப்பட்டன, வீரகண்டையம் புதிதாகச் செய்து பொன் பூசப்பட்டது. வெள்ளித் திருவாசி செய்து சாத்தப்பட்டது, திரிகோகரண ஏகம்பர் செய்து சாத்தப்பட்டது. கொடிமரம் புதிதாகச் செய்து செப்புத்தகடு போட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருமதில்களில் கோடிபூதம் ரிஷபங்கள் அமைக்கப்பட்டன. சுவாமி சந்நிதி, தியாகராசர் சந்நிதிகளில் கம்பி அமைத்து சேவார்த்திகள் வசதியாக நின்று தரிசிக்க ஏற்பாடுசெய்யப் பட்டிருக்கிறது. மூலஸ்தான மூர்த்திக்கு வெள்ளி நாகா பரணம் செய்து சார்த்தப்பட்டது. மாங்காய் மாலை ஒன்றும் வாங்கப்பட்டிருக்கின்றது.

வசந்த விழா தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் முசுகுந்த சகஸ்ரநாமார்ச்சனை செய்யப் படுகிறது.

எடுபிடிகள், ஒலி பெருக்கி, பித்தளைப் பாத்திரங்கள், வெள்ளி குத்துவிளக்குகள் முதலியனவும் வாங்கப்பட்டன. சுமார் 99 ஏக்கர் சவுக்கை, பாதி வார வட்டத்தில் போடச் செய்திருக்கிறது. பண்ணையில் சுமார் 30 ஏக்கர் சாகுபடி செய்யப்படுகிறது. 200 க்கு மேற்பட்ட தென்னை மரங்கள் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. அபிஷேகத்துக்குக் கறவைப் பசுக்கள் வாங்கிப் பராமரிக்கப்பட்டுவருகின்றன.

ஸ்ரீ தியாகராஜசுவாமி சந்நிதியில் வெள்ளி நிலை, கதவுகளமைத்தும், சுவாமி அம்பாள் தியாகராஜா கருப்பக் கிருகம் அர்த்தமண்டபம் சுவர்களில் பித்தளைத்தகடுகள் பதிக்கப்பட்டுள்ளன. தியாகராஜாவுக்கு வெள்ளியில் சிம்மாசனம் செய்யப்பட்டுள்ளது.

## மகாகும்பாபிஷேகம்

பல திருப்பணிகளையும் நிறைவேற்றி குரோதி௵ ஆனி௴ 16உ (29—6—64) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குத் தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் அருளாணைப்படி ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது.

அன்பர்கள் தெய்வீகத் திருத்தலமாகிய இத்திருக் கோளிலித் தலத்தைத் தரிசித்து இருமைப் பயன்களும் எய்தி இறையருள்பெற்று இன்புறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனத்திற்குச் சொந்தமான




திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்குச்
செல்லும் மார்க்கம்

# சிவாலயதத்துவமும் :: :: மகாகும்பாபிஷேகமும்

## சிவாலயதத்துவம் :

ஆலய அமைப்பு இரண்டு விதம். ஒன்று சரீர அமைப்பை ஒட்டியது; மற்றொன்று இருதயகமல அமைப்பை ஒட்டியது, சத்த தாதுக்களின் நிலைமை முதலியவற்றை முன்னும் உள்ளத்தின்கண் சொல்லாயும் பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வொரு பொருளையும் பற்றிப் பின்னும் அறியலாம்.

சிவாலயங்களில் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் மகாமண்டபம், ஸ்தபனமண்டபம் (நீராட்டு மண்டபம்), தம்பமண்டபம், நிருத்தமண்டபம் முதலியனவும், ஐந்து அல்லது மூன்று பிராகாரங்களும், கோபுரம், யாகசாலை, நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பம் முதலியவைகளும் முக்கிய மாகக் காணப்படுவனவாகும்.

தேகமாகிய ஆலயத்துள்ளும் மூலாதாரம், சுவாதிட் டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என ஆறு ஆதாரங்களும் அறியப்படும். மற்றொருவகை உடலில் தலை, கழுத்து, மார்பு, நாபி, பாதம் என ஐந்து பிரிவுகள் உள்ளன. சிவாலயங்களில் கர்ப்பக்கிருகம் தலை; அர்த்த மண்டபம் கழுத்து; மகாமண்டபம் மார்பு; யாகசாலை நாபி : கோபுரம் பாதம் ஆகும்.

இவ்வுடலில் அன்னமய கோசம், பிராணமய கோசம் மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம். ஆனந்தமய கோசம்என்றுஐந்துகோசங்கள் உள்ளன. கோசம்-சட்டை

கோயிலிலுள்ள ஐந்து பிராகாரங்களும் இவற்றைக் குறிக்கின்றன. அன்னமயகோசம் முதலியவற்றைத் தூலசரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுகசரீரம், காரணசரீரம் என அறிக.

ஐந்து பிராகாரங்களை நிவர்த்தி முதலிய ஐந்துகலைகளாகவும் கூறுப. இவைகள் எல்லாம் உண்மை நூல்களை முறையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தக்கனவேயல்லாமல் தாமாகப் படித்துத் தெரிந்து கொள்ளத்தக்கன அல்ல ஆதலின் சுருக்கமாகக் கூறப்பட்டன.

இனி, இருதய அமைப்பை ஒட்டி ஆராய்வாம், இருதயத்தில் கீழ்நோக்கிய தாமரைமொட்டு வடிவான மாமிசபிண்டம் ஒன்றிருக்கிறது. அதன் நடுவில் அங்குட்டம் பிரமாணமுள்ள இடைவெளியிருக்கிறது, அது தகராலயம் எனப்படும். யோகிகள் தியானிப்பது இச் சபையிலே.

சிவாலயத்திலுள்ள தூபியும் இருதய கமலாகாரமாகத் தியானிக்கப்படும். அவற்றின் விரிவை நூல்களிற் கண்டு கொள்க.

இனி, இவ்வான்மா இச்சரீரத்தில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவத்தைப் படும். சாக்கிரம் - நனவு; சொப்பனம் – கனவு; சுழுத்தி – தூக்கம்; துரியம் - பேருறக்கம்! துரியாதீதம் – உயிர்ப் படங்கு நிலை. நனவு கனவு உறக்கமேயல்லாமல், ஒருவன் நன்றாகத் தூங்கினேன் என்று சொல்வதைக் கொண்டு பேருறக்க நிலையும், ஒருசிலர் நன்றாய்த் தூங்கும்போது ஒன்று இரண்டு நிமிடம் சுவாசிப்பதையும் விட்டிருந்து பிறகு பெருமூச்சு விடுதலைக்கொண்டு உயிர்ப்பு அடங்கு

நிலையும் உண்டெனக்கொள்க. ஆலயங்களிலும் அவ்வண் ணமே மூலஸ்தானத்திலிருந்து வெளிவந்து வீதியுலாப் போந்து மூலஸ்தானத்தை யடைவதையும் கண்டுகொள்க.

சிவாலயங்களில் இலிங்கம், நந்தி, பலிபீடம் என்ற மூன்றுள்ளன. அவை பதி, பசு, பாசம்மூன்றையுங்குறிப்பன. சிவாலயம் முழுவதும் தேவதாசொரூபமேயாகும். சிவ பெருமான் தான் ஒருவரேயாயிருந்தும், ஆன்மாக்களுக்கு நிக்கிரகம், அநுக்கிரகம் செய்யும் பொருட்டுச் சாந்தமும் கோரமுமாகிய பல வடிவங்களைக் கொண்டருளுவர்; அவ் வடிவங்களே ஆலயங்களில் பூசிக்கப்படும் மூர்த்திகளாகும்.

சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களும் செய்தருளுவர். இப் பஞ்சகிருத்தியம் நித்திய பஞ்சகிருத்தியம், மகா பஞ்சகிருத்தியம் என இரு வகைப்படும். பூதபரிணாமமாகிய தூல உடம்பைக் கொடுத் தலும், பிராரத்தகன்மம் புசித்துத் தொலைக்கும் வரை தூல உடம்பை நிறுத்துதலும் தூல உடம்புகளைச் சங்கரித்த லும் கர்மத்தை உருசிப்பித்து ஆணவவலியையடக்கலும், தனது திருவடி நிழலில் இருந்து பேரின்பத்தை அநுப விக்கச் செய்தலும் நித்திய பஞ்ச கிருத்தியமாகும்.

இனி, மாயையிலிருந்து தநு, கரண, புவன, போகங் களைத் தோற்றுவித்தலும், தோற்றுவிக்கப்பட்டவைகளைப் புசிப்புக் காலம்வரை நிலைநிறுத்தலும், அவற்றைத் தத்தம் காரணத்திலொடுக்கலும், பக்குவம் வரும் அளவும் கன் மங்களைப் புசிப்பித்தலும், பக்குவ ஆன்மாக்களுக்குத் தீட்சை செய்து பாசத்தை அழித்துத் திருவடி நிழலிற் சேர்த்தலும் முறையே மகாபஞ்சகிருத்தியமாம்.

சிவாலயங்களில் நடைபெறும் நித்திய பூசைகளும் திருவிழாக்களும் இவ் விருவகைப் பஞ்சகிருத்தியங்களை உணர்த்துவனவாகும்.

**நித்திய பூசை :**

நாடோறும் நடைபெறும் அபிடேகம், கௌதுகபந்தனம், தூபம், தீபம், கற்பூர தீபம் இவை நித்திய பஞ்ச கிருத்தியத்தை உணர்த்துவன. இங்ஙனமின்றி அபிடேகம் நைவேத்தியம், நீராஞ்சனம், பலி பலிநாயகர் எழுந்தருளுதல் இவற்றை நித்திய பூசையில் பஞ்சகிருத்தியம் என்பாரும் உளர்.

பிரதக்ஷிணம் செய்வது சிவ வியாபகம் ஆன்மாவில் விளங்குதற் பொருட்டேயாம்; நமஸ்காரம் செய்வது சிவ பெருமானது அடிமையாய் அவருடன் அத்துவிதமுற்று நிற்றலைக் குறிப்பது; முரசு முதலியன இசைத்தலும் ஓர் உண்மையினை விளக்குவதாகும். அதாவது :

சிவயோகிகள் சரீரத்திலுள்ள அசுத்தவாயுவைக் கழித்து, புறத்தேயுள்ள சுத்தவாயுவைப் பூரித்துப், பிராண வாயுவைக் கும்பித்து, மூலாக்கினியை மூட்டிக் குண்டலி சத்தியை எழுப்பி, ஆறு ஆதாரங்களையும், ஆங்காங்குள்ள தேவதைகளையும் பிரணவ தியானத்துடன் தரிசித்து, அவ்வாதாரங்களுக்கு மேலாய் விளங்கும் பிரமரந்திரத்தில் உள்ள சந்திரமண்டலத்தை இளகச் செய்து, அமிர்தத்தை நாடிகளில் நிரப்ப, சதங்கையோசை சிலம்பு ஓசை கண்டா மணி ஓசை முதலிய தசநாதங்களும் தோன்றும் என்பதை உணர்த்தும் பொருட்டேயாம்.

ஆலயங்களில் நடைபெறும் சோடச உபசாரங்களில் சிலவற்றின் கருத்துக்களை விளக்குவனவாம். ஆவாகனம் சிவ பெருமானுடைய பரிபூரண 'ஞானப்பிரகாசத்தை அறிந்து அழுந்துதல். தாபனம் அவ்வழுத்தத்தில் நிலைபேருகப் பொருந்துதல். சந்நிதானம், ஆன்மாவின் அறிவு சிவ பூரணத்திலும் சிவபூரணத்துவம் ஆன்மாவின் அறிவிலும் ஒன்றி அந்யோந்யமாயிருத்தல். சந்நிரோதனம் அவ் வாறே எக்காலத்திலும் நீக்கமின்றியிருத்தல். பாத்தியம் சிவபெருமானது திருவடிகளிற் சேருதல். ஆசமனம் சத்திகளின் விளக்கத்திலே திருவருளாகிய திருமுகத்தில் பொருந்துதல். அர்க்கியம் திருமுகம் என்னும் அருளைத் திருமுடியிற் பொருத்துதல். புட்பதானம் மனமாகிய புட்பக்குடலையில் ஞான அட்ட புட்பங்களாகிய கொல்லாமை வாய்மை, பொறியடக்கம், பொறை, அருள், அறிவு, தவம், அன்பு என்னும் எட்டுவித மலர்களையும் நிறைத்துச் சாத்துதல். தூபம் அறியாமையை நெருப்பில் இட்டுப் புகைத்தல். தீபம் ஞானப்பிரகாசத்தை ஏற்றுதல். நைவேத் தியமும் முகவாசமும், ஆணவாதிகாரியங்களைப் பலிகொடுத் தலாம். இங்ஙனமே மற்றவைகளின் உண்மைப் பொருள் களையும் ஓர்ந்து அறிந்துகொள்க. தீபம் பலவற்றுள்ளும் கர்ப்பூரதீபம் சிறந்தது. கர்ப்பூரம், அக்கினி பற்றியவிடத் துச் சிறிதும் மீதமின்றி அக்கினியிற் கரைந்துபோகும். அதுபோல் ஆன்மாவும் சிவஞானக்கினி பற்றியவிடத்துப் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவமுறுதலை விளக்குவது.

## நைமித்திய பூசை :

நைமித்திய பூசை எனப்படும் திருவிழாக்களும் ஒவ் வொரு பொருள் குறித்தனவேயாம்.

## துவஜாரோகணம் :

கொடியேற்று விழா - செங்கோல் அரசன் கொடி ஏறிய வழி கொடுங்கோலரசன் வலி ஒழிந்து செயலழிந்து ஒழியக்

குடிகள் க்ஷேமம் அடைதல் அநுபவ உண்மை, அதுபோல மும்மல பந்தமுற்றுப் பிறந்திறந்து உழன்று வருந்தும் உயிர்கள் தீட்சை பெற்றுப் பஞ்சாட்சரத்தை விதிப்படி உச்சரித்து, பராசத்தியையும் சிவத்தையும் இருதயத்திலே வைத்துத் தியானித்து, தன்னிடத்தில் அநாதியே தோன்ருமல் நிற்கும் திருவருளினுல் அறிவே தாரகமாக நிறுத்த, பரையாகிய கொடி ஏறிச் சிவத்தை இரண்டறக் கலப்பித்தலால், ஆணவமல அரசு வலியிழந்து செயலழிந்து ஒடுங்க, ஆன்மா பேரானந்தப் பெருவாழ்வடையும்; ஆகவே பாசநீக்கத்திற்கும் வீடுபேற்றிற்கும் திருவருளாகிய கொடி ஏறவேண்டும் என்பதை அறிவிக்கும் குறியாகும்.

பெரும்பாலும் திருவிழாக்கள் பத்துத்தினம் நடைபெறும். அவைகளில், துவஜாரோகணம் சிருட்டி: வாகனுதி உற்சவங்கள் திதி; சூரனுேற்சவம் இரதோற்சவம் சங்காரம். மௌனுேற்சவம் திரோபவம்; தீர்த்தோற்சவம் அநுக்கிரகம்.

இஃதன்றியும் ஒவ்வொருநாளும் நடைபெறும் உற்சவங்களும் தனித்தனியே ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் எனவும், ஒவ்வொருநாளும் வெளிவரும் வாகனங்களும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் எனவும் கூறுப. விரிந்த நூல்களிற் கண்டுகொள்க. அவற்றுள், இடபவாகன ஆரோகணக் காட்சியும் தேர்த் திருவிழாவும் சிறந்தனவாகும்.

## இடபவாகனக்காட்சி :

சிவபெருமான் அடியார்களுக்குக் காட்சி வழங்கும் போது இடபவாகனரூட்ராகவே காட்சிவழங்குகிருர். இடபம் எவ்வகையான மாசும் அற்றது. சுத்த வெள்ளை நிறமுடையது. சமம் முதலிய நான்கு குணங்களைக் கால்களாகவுடையது. ஆணவ மலத்தை ஒழித்து அறிவைப்

பணிவுடன் ஏற்றுநிற்கிறது. ஆன்மாக்கள் இங்ஙனம் ஆகும்போதுதான் இறைவன் பேரருள் சுரக்கின்ருன். ஆகையால் இக்காட்சி அநுக்கிரகக் காட்சியாகும். எனவே இது மிகச் சிறந்ததாகும்.

இரதக்காட்சி :

தேவர்கள் வேண்டுகோளின்படி பூமி, சூரியன், சந்திரன் முதலியவர்களையே தேராகவும் உபகரணங்களாகவும் கொண்டு சிவபெருமான் திரிபுரத்தசுரர்களை வதைக்கச் சென்றகாலத்து அத்தேவர்கள் தங்களால்தாம் சிவபெருமான் வெற்றிபெறப் போகிருர் என எண்ணியபோது உயிர்க்குயிராகிய சிவபெருமான் அதனை யுணர்ந்து அவர்கள் உதவியின்றிச் சிரித்து முப்புரத்தையும் எரித்த வரலாற்றை உட்கொண்டது. இதனுல் சிவபெருமானே விசுவரூபி, விசுவகாரணர், விசுவசேவியர், விசுவாந்திரியாமி என்பதை விளக்குவதாகும்.

இங்ஙனமின்றியும் வேறுவேறு விதமான தத்துவம் உணர்த்துவதாகவும் கூறுப. விரிவஞ்சி விடுத்தாம். விரிந்த நூல்களிற் கண்டுகொள்க.

சில சிவாலயங்களில் 10-வது நாள் திரு நடனக்காட்சி நடைபெறுவதுண்டு. திருநடனம் 9 வகைப்படும். அவற்றுள் ஆனந்த தாண்டவம் தில்லையில் கனகசபையில் பதஞ்சலி வியாக்கிரபாதர் காண ஆடியது. அநவரத தாண்டவம் தமருகம், அபயம், அக்கினி, ஊன்றிய திருவடி, தூக்கிய திருவடி இவற்ருல் சிருட்டி திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியம் செய்தருளுவதைக் குறிப்பதாகும். இப்பஞ்சகிருத்தியம் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என மூவகைப்படும். விரிவைச் சித்தாந்த நூல்களிற் காண்க.

பெருங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான் நாமெல்லாரும் உய்யும்பொருட்டுச் சிவாலயங்களில் திருமேனி கொண்டெழுந்தருளியிருந்தருள் செய்யவும் நாம் அவரை வழிபடாமையும், உண்மை உணராமையும் செய்ந்நன்றி மறத்தலாகிய பெருங் கொடும்பாவமாகும்:

நாம் நாடோறும் அபுத்தி பூர்வமாகச் (குற்றம் என்று தெரியாமல்) செய்யும் பாவங்கள் நித்திய வழிபாட்டினுல் தீரும்; நித்திய வழிபாட்டில் நேரும் பாவங்கள் நைமித்திக வழிபாட்டினுல் தீரும். ஆகையினுல் சிவாலய வழிபாடு செய்து இருமைப் பயனும் ஒருங்கு எய்துவோமாக.

## சிவாலய தரிசனவிதி

சிவாலய தரிசனஞ் செய்ய விரும்புவோர் அகத்தும் புறத்தும் தூயராய்ச், சிவச்சின்னங்களணிந்து, சிவ நாமத்தை உச்சரித்துக்கொண்டு சென்று, தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி நமஸ்கரித்து, உள்ளே சென்று மெல்லப் பிரதக்ஷிணம் செய்து, சந்நிதியில் நமஸ்கரித்துத் துவாரபாலகரை வணங்கிப்பின் திருநந்தி தேவரையும் வணங்கிச் சிவபெருமானைத் தரிசிக்க அநுமதிபெற்று உள்ளே சென்று விக்கினேஸ்வரரை வணங்கிக் குட்டிக் கொண்டு தாழ்ந்து தோத்திரம் பண்ணக்கடவர். பின் சிவ சந்நிதியையடைந்து அஞ்சலி செய்து திருவருட்பாக்களை ஓதிப் பின் சபாபதி, தக்ஷிணமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் நால்வரையும் வணங்கித் துதிக்கக்கடவர். பின் அம்மை சந்நிதி அடைந்து வணங்கிச், சண்டேசுரர் சந்நிதியடைந்து வணங்கி மூன்றுமுறை கைதட்டிச் சிவதரிசனபலன் தரும்படி பிரார்த்திக்கக் கடவர். அதன்பின் நந்திதேவரை வணங்கி விடைபெற்று வீட்டுக்குச் செல்லக்கடவர்.

சிவாலயத்துக்குச் செல்வோர் தங்கள் தகுதிக்கேற்ப பழம் முதலியன கொண்டுசென்று அருச்சிப்பித்து விபூதிப் பிரசாதம் பெறக்கடவர், ஒன்றும் இயலாதவர் சந்நிதியில் கிடக்கும் செத்தை முதலியவற்றை அப்புறப்படுத்தி இயன்ற தொண்டு செய்யக்கடவர்.

## கும்பாபிஷேக மகத்துவம் :

கும்பாபிஷேகம் பெருவிழா அல்லது பெருஞ்சாந்தி எனப்படும், "கபாலீச்சரம் அமர்ந்தான் பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்" எனவரும் திருஞான சம்பந்தப் பெருமான் திருவாக்காலும் உணர்க. கும்பா பிடேகம் என்பது கும்பத்திலுள்ள நீரினல் அபிடேகித்த லாம்.

## கும்பம் சிவசொரூபம் :

கும்பவஸ்திரம் தோல்; மேல்பூசிய செம்மண் இரத்தம்; கும்பத்துமண் மாமிசம்; உதகம் மேதை; கூர்ச்சம் எலும்பு; மேல் சுற்றிய நூல் நரம்பு; கும்பத்தில் இடும் பொன் பூ முதலியன வீரியம்; நியசிக்கப்பட்ட மந்திரம் உயிர்; கீழிட்ட நெல் முதலிய தானியம் ஆசனம்; கும்பத்தை முதலில் கோயிலிலுள்ள பிம்பத்தின் சமீபத்தில் வைத்துத் தருப்பை மாவிலே முதலியன கொண்டு மந்திரங்களைச் சொல்லிப் பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் செய்வார்கள். ஆவாகனமாவது மந்திரங்களைச் சொல்லிக் கும்பத்தில் அபிமுகம் ஆகச்செய்தல். பிறகு அக்கும்பத்தை மங்கள முழக்குடன்யாகசாலைக்கு எழுந்தருளச்செய்வார்கள்.

யாகசாலையானது முப்பத்தாறு தத்துவ சொரூபமானதும் சிவபெருமானது அட்டமூர்த்த வடிவமானதும் ஆகும். யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் ஒன்பது அக்கினி வளர்க்கப்பெறும், சாதாரணமாக நாடோறும் ஆகவனீயம்

தக்ஷிணுக்கினியம் காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினி வளர்க்கப்பெறும் என்பதை, 'மூன்று வகை குறித்த முத்தீச் செல்வத்து' எனவரும் திருமுருகாற்றுப்படை அடிகளால் உணரலாம்அவை நாற்கோணம்முக்கோணம்அர்த்தசந்திர வடிவம் முதலாக ஒன்பது வடிவில் காணப்படும். அவ்வாறு வடிவமைப்பதற்குக் காரணங்கள் உண்டு; குண்டங்களைச் சுற்றி முறுக்கிய பசுந்தர்ப்பைகளைப் பரப்பி ஆல், அரசு முதலிய சமித்துக்களைக் குண்டத்திலிட்டுக் கடைந்தெடுக்கப் பட்ட சுத்தமான அக்கினி கொண்டு அதற்குரிய மந்திரங் களைச் சொல்லி அதிதெய்வங்களை மனத்தில் தியானித்து சுருக்கு சுருவம் என்னும் கருவிகளைக் கொண்டு நெய் முதலியன சொரிந்து அக்கினி வளர்ப்பார்கள். இங்ஙனம் மந்திரம், கிரியை, பாவனை மூன்றினுலும் வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து எழும் புகையும், வேதஒலி, சிவாகமஒலி தமிழ்மறைஒலி இவற்றுடன் உத்தம மெய்யன்பர்கள் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபித்திருக்கிற இறைவ னது அருட் சத்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும். அப்போது அக் கும்பம் தெய்வீக சத்தி கலைகள் நிரம்பியதாகும். மின்சாரத்தைச் செலுத்தச் செப்புக் கம்பி முதலியனவே தகுதியுடையனவாதல் போலத் தருப்பை நுனி, மாவிலை முதலியனவும் மந்திரங்களுடன் கூடிய வழி சிவசத்தியாகிய மின்சாரத்தைச்செலுத்தக்கூடியனவாதலின் அவற்றைக் கைக்கொள்ளுகிருர்கள் என்பதையும் நுண்ணி தின் உணர்ந்துகொள்க.

இவ்வாறு யாகசாலையில் நடைபெறவேண்டிய கிரி யைகள் முற்றுப்பெற்றவுடன், மீண்டும் தெய்வீக சத்தி ஆலயத்திலுள்ள பிம்பத்தினிடமாக அமையவேண்டி, அச் சத்தியைச் செலுத்தும் சத்திவாய்ந்த தருப்பைக் கயிற்றின் வழி அச் சத்தியைப் பிம்பத்தில் சேர்ப்பித்துக் கும்பத்தி லுள்ள நீரினல் சிகரங்களிலும் பிம்பத்திலும் அபிடேகம் செய்வார்கள். இதுவே கும்பாபிடேகமாகும்.

யாகாக்கினி ஆல், அரசு, புரசு முதலிய சமித்துக் கொண்டு வளர்க்கப்படுவது. நெய், பால், பழம் முதலி யனவும் சொரிவார்கள். தைலம் வடிப்பவர்கள் ஒருவகை விறகு கொண்டே காய்ச்சி வடிக்கிறார்கள். வேறுவகை விற கானல் தைலம் குணம் கெடும் என்பது அவர்கள் துணிபு. சூடு ஒன்றுபோல் நமக்குக் காணப்பட்டாலும் விறகுக்குத் தக்க குணந்தருகிறது என்பது தெளிவு.

துரியோதனன் ஏவலால் காளமாமுனி ஆபிசார ஓமம் வளர்ப்பதற்கு விஷ மூலிகைகளைச் சமித்தாகக்கொண்டார் என்பதும், அதற்குத்தக அக்கினியிலிருந்து பூதம் தோன் றியதென்பதும் பாரதத்துக் கூறப்பட்டது காண்க.

## இனி மந்திரம் பலன் தருவதென்பது :

விடந்தீண்டப்பெற்றார் மாந்திரிகன் உச்சரிக்கும் மந்தி ரத்தால் விடம் தீரப்பெறுவதை நேரிலும் அறிகிறோம்; கேட் டும் அறிகிறோம்; அங்ஙனமே விடத்தைப் போக்கும் அம் மந்திரத்தினும் மேலான பிரமமந்திரங்களும் அங்கமந்திரங் களும் பலன் தருவனவே. சொல்லுக்கும் செயலுக்கும் சத்தி உண்டென்பதுடன் எண்ணத்திற்கும் சத்தி உண்டென விஞ்ஞானிகளும் கூறுவர். ஒருவன் எண்ணும் எண்ணங்கள் உருக்கொண்டு வெளிச் சென்று பின் எண்ணியவனையே அடைகின்றன என்கின்றனர். ஆகையினால் யாகாக்கினி, மந்திரம், பரிசுத்தமுடையவர்களது எண்ணம், இவை எல்லாம், எல்லாம் நிறைந்துள்ள தெய்வீக சத்தியாகிய மின்சாரத்தைக் கும்பத்தில் செலுத்துகின்றன என்பதும் கும்பத்திலுள்ள நீர் கிரகிக்கின்றது என்பதும் யுத்திக்குப் பொருந்துமாற்றானும் கண்டு சுருதி அனுபவங்களோடு ஒட்டிக்கொள்க.



ஸ்ரீ சந்திரசேகரர்

காலவரையறைக்குட்பட்ட கிறித்தவ, முகம்மதிய மதத்தவர்களும் சில கிரியைகளைச் செய்கிறார்கள். செய்யும் போது தங்கள் நூலிலிருந்து சில வசனங்களைப் படிக்கிறார்கள். இவர்கள் கொண்ட தலைவர்களது பிறப்பு முதலியவைகள் அவர்கள் நூல்களிலேயே பேசப்படுகின்றன. சைவர்கள் செய்யும் கிரியைகள் பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானருளிய சிவாகமங்களில் கூறப்பட்டன. இக் கிரியைகள் எல்லாம் பொருள் குறித்தன. நன்மை பயப்பன. சைவர்கள் தங்களுக்கென்று வேண்டாமல் உலகத்திற்கே நன்மை வேண்டுவர் என்பதும் ஓர்க.

அஷ்டபந்தனம் :— ஆலயத்தில் உள்ள பிம்பங்கள் அசைந்தாலும் கீழ்நோக்கினாலும் மேல்நோக்கினாலும் மக்கட்கும் அரசாங்கத்திற்கும் நன்றன்று. ஆதலின் அப் பிம்பங்கள் அசையாமல் நேரே பார்த்திருக்கும்படி, கொம்பரக்கு முதலிய எட்டுப் பொருள்கொண்டு இடித்த மருந்தைப் பீடத்தைச்சுற்றிப் பதியவைத்தலாம்.

சொர்ணபந்தனம் :— முன்கூறியபடி நேரே இருப்பதற்காகத் தங்கச்சுருள்கொண்டு பதியவைத்துக் கெட்டிப் படுத்தலாம்.

மகாபிஷேகம் :— கும்பாபிஷேகம் ஆனவுடன் செய்ய வேண்டிய கிரியை, இறைவனைப் பிம்பத்திலிருந்து கும்பத்திலும் கும்பத்திலிருந்து பிம்பத்திலும் ஆவாகனம் செய்த முறையால் விளைந்த களைப்புத் தீர்வதாகப் பாவித்து, மிகுதியான அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகித்து, நன்கு பக்குவமான நிவேதனங்களை நிவேதித்து உபசரிப்பதாம். இதனை மகாஹவிர்நிவேதனம் எனக் கூறுவதுமுண்டு.

மண்டலாபிஷேகம் :— கும்பாபிஷேகத்திற்கு முன் பிம்பத்திற்குக் காப்புநாண் அணிவார்கள். கும்பாபிடேக

தினத்திலிருந்து 45-நாள் விசேட அபிஷேக ஆராதனை செய்து 45-வது நாள் காப்புநாண் அகற்றுவார்கள். கிரியை பூர்த்தியாகும்.

## யாகசாலையில் நடைபெறும் சில கிரியைகளின் விளக்கம்

அனுக்ஞை :— கும்பாபிஷேகத்தின் பொருட்டு இறைவனிடம் அநுக்கிரகம் பெறுதல்.

விக்னேசுவரபூசை :— கும்பாபிடேகக் கிரியை இடையூறு இன்றி இனிது நிறைவேறும் பொருட்டு விநாயகரை வழிபடுதல்.

ரக்ஷோக்னம் :— நல்லகாரியங்களில் இடையூறு செய்யும் அரக்கர்களை வெருட்டித் திரும்ப அவ்வரக்கர்கள் வராமற் காத்தற்பொருட்டு எட்டுத் திக்கிலும் வைரவர் களையும் நடுவில் இலக்குமியையும் பூசித்தல்.

கிருகமகம் :

நவக்கிரக ஹோமம், சூரியன் முதலிய ஒன்பது கிரகங் களையும் அசுபதி முதலிய நக்ஷத்திரங்களுடன் அவற்றின் அதிதேவதைகளையும் பூசித்துக் கிரியை நன்கு நிறைவேறும் படி பிரார்த்தித்தல்.

வாஸ்துசாந்தி :

வாஸ்து புருடனை உபாசித்தல். நற்காரியங்கள் நடை பெறும் இடமெல்லாம் அக்காரியத்தைத் தடுக்கும் அவ் வசுரனை அவ்வாறு செய்யவொட்டாது காக்கும்படி பிர்மா முதலிய தேவர்களை வேண்டுவதுடன் அவ் வாஸ்து புருட னுக்கும் சாந்தி செய்தல்.

**மிருத்சங்கிரகணம் :**

பாலிகையின் பொருட்டுப் பூமிதேவி, சப்தசமுத்திரம், இந்திரன், பிர்மா முதலிய தேவர்களை வழிபட்டு மண் எடுத்தல்.

**அங்குரார்ப்பணம் :**

பாலிகை தெளித்தல். இது நன்ருகச் செய்யப்படும் யாகத்தின் பலாபலன்களை அறிவிக்கும் கருவி போன்றது.

**ரக்ஷாபந்தனம் :**

ஆசாரியருக்குக் காப்பணிதல். இது ஆசாரியனை ஆசௌசாதிகளினின்றும் காக்கிறது.

**கலாகர்ஷணம் :**

பிம்பத்திலுள்ள கலையைத்தங்க நூல்வழி ஆகர்ஷித்தல்.

**கும்பாபிடேக பலன் :**

உலகத்தில் ஒருவரை ஒருவர் வாழ்த்துகிறபொழுது 'கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்த பலன் தங்களுக்குக் கிட்டுமாக' என்கின்றனர். இதனுல் கும்பாபிஷேகம் செய்வித்தல், துணைபுரிதல், கண்டு களித்தல் முதலியவற்றின் மகத்துவம் நன்கு விளங்குகிறது. வேண்டுவார் வேண்டுவதே யீவானுகிய இறைவன் கும்பாபிஷேகத்தால் ப்ரீதியடைவதால் நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் நன்மை உண்டு. தரிசித்தவர் இம்மைப் போகங்களேயன்றிச் சிவபோகமாகிய பேரின்பமும் பெற்று வாழ்வார்கள் என்பது உண்மை.

உ

சிவமயம்

# திருக்கோளிலித் திருப்பதிகங்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

திருப்பதிக வரலாறு :- மல்லல்நீடிய வலிவலம் வணங்கிப் போதரும்பிள்ளையார் கோளிலிப்பெரும்பதியையடைந்து கோளிலிப் பெருமான் குரைகழலைக் கும்பிட்டு "நாளாய போகாமே" என்னும் இத்திருப்பதிகத்தைப் பாடினர்.

பண் – பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோ மடனெஞ்சே யரனுமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. 1

ஆடரவத் தழகாமை யணிகேழற் கொம்பார்த்த
தோடரவத் தொருகாதன் றுணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவந் தீர்க்குமவன் கோளிலியெம் பெருமானே. 2

நன்றுநகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய லுற்றவன்றன் ஓங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்றிகழுங் கோளிலியெம் பெருமானே.

வந்தமண லால்இலிங்க மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தைசெய்வோன்றன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம்பெருமானே.

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே. 5

தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றுதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே. 6

கன்னவிலு மால்வரையான் கார்திகழு மாமிடற்றான்
சொன்னவிலு மாமறையான் தோத்திரஞ்செய்வாயினுளான்
மின்னவிலுஞ்செஞ்சடையான்வெண்பொடியானங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான் கோளிலியெம் பெருமானே. 7

அந்தரத்தில் தேரூரும் அரக்கன்மலை யன்றெடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலால் ஊன்றவவ னுடல்நெரிந்து
மந்திரத்த மறைபாட வாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலியெம் பெருமானே. 8

நாணமுடை வேதியனு நாரணனு நண்ணவொணாத்
தாணுவெனை யாளுடையான் தன்னடியார்க் கன்புடைமை
பாணனிசை பத்திமையால் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணலிளம் பிறைச்சென்னிக் கோளிலியெம் பெருமானே.

தடுக்கமருஞ் சமணரொடு தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரு மொழிகேளா தீசனையே யேத்துமின்கள்
நடுக்கமிலா வமருலகம் நண்ணலுமா மண்ணல்கழல்
கொடுக்ககிலா வரங்கொடுக்குங் கோளிலியெம்பெருமானே.

நம்பனைநல் லடியார்கள் நாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்டு
இன்பமர வல்லார்கள் எய்துவர்கள் ஈசனையே. 11

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள்

திருப்பதிக வரலாறு :- திருநாவுக்கரசர் திருவீழிமிழலையையும் திருவாஞ்சியத்தையும் போற்றிப் புனிதர்வாழ்பதிகள் வணங்கித் திருமறைக்காட்டிற்குச் செல்லும் பொழுது திருக்கோளிலியப்பரை வணங்கிப் பாடியது இத்தமிழ்மாலை,

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மைக்கொள் கண்ணுமை பங்கினன் மான்மழுத்
தொக்க கையினன் செய்யதோர் சோதியன்
கொக்க மர்பொழில் சூழ்தரு கோளிலி
நக்க னைத்தொழ நம்வினை நாசமே. 1

முத்தி னைமுத லாகிய மூர்த்தியை
வித்தி னைவினை வாய விகிர்தனைக்
கொத்த லர்பொழில் சூழ்தரு கோளிலி
அத்த னைத்தொழ நீங்கும்நம் அல்லலே. 2

வெண்டி ரைப்பர வைவிட முண்டதோர்
கண்ட னைக்கலந் தார்தமக் கன்பனைக்
கொண்ட லம்பொழிற் கோளிலி மேவிய
அண்ட னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. 3

பலவும் வல்வினை பாறும் பரிசினல்
உலவுங் கங்கையுந் திங்களும் ஒண்சடை
குலவி னன்குளி ரும்பொழிற் கோளிலி
நிலவி னன்றனை நித்தல் நினைமினே. 4

அல்ல லாயின தீரு மழகிய
முல்லை வெண்முறு வல்லுமை யஞ்சவே
கொல்லை யானை யுரித்தவன் கோளிலிச்
செல்வன் சேவடி சென்று தொழுமினே. 5

ஆவின் பால்கண் டளவி லருந்தவப்
பாலன் வேண்டலுஞ் செல்லென்று பாற்கடல்
கூவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
மேவி னானைத் தொழவினை வீடுமே. 5

சீர்த்த நன்மனை யாளுஞ் சிறுவரும்
ஆர்த்த சுற்றமும் பற்றிலை யாதலால்
கூத்த னாருறை யுந்திருக் கோளிலி
ஏத்தி நீர்தொழு மின்னிடர் தீருமே. 7

மால தாகி மயங்கும் மனிதர்காள்
காலம் வந்து கடைமுடி யாமுனம்
கோல வார்பொழிற் கோளிலி மேவிய
நீல கண்டனை நின்று நினைமினே. 8

கேடு மூடிக் கிடந்துண்ணு நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே. 9

மடுத்து மாமலை யேந்தலுற் றான்றனை
அடர்த்துப் பின்னு மிரங்கி யவற்கருள்
கொடுத்த வன்னுறை கோளிலி யேதொழ
விடுத்து நீங்கிடும் மேலை வினைகளே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பதிக வரலாறு:- திருநாவுக்கரசர் திருவாஞ்சியம் முதலிய பல பதிகளையும் வணங்கித் திருமறைக்காடு செல்லும் பொழுது திருக்கோளிலியப்பரைப் போற்றிப் பாடியருளியது இத் திருப்பதிகம்.

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அன்ன மே நினை யாதொழிந் தேனுனை
இன்னம் தானுன சேவடி யேத்திலேன்
செந்நெல் ஆர்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன னேயடி யேனை மறவலே. 1

விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கும் மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே. 2

நாளும் நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளும் நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளிலி யான் பாதமே கூறுமே. 3

விழவி னோசை யொலியருத் தண்பொழில்
பழகி னார்வினை தீர்க்கும் பழம்பதி
அழல்கை யானம ருந்திருக் கோளிலிக்
குழக னார்திருப் பாதமே கூறுமே. 4

மூல மாகிய மூவர்க்கும் மூர்த்தியைக்
கால னாகிய காலற்குங் காலனைக்
கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலிச்
சூல பாணிதன் பாதந் தொழுமினே. 5

காற்ற னைக்கடல் நஞ்சமு துண்டவெண்
நீற்ற னைநிமிர் புன்சடை யண்ணலை
ஆற்ற னையம ருந்திருக் கோளிலி
ஏற்ற னரடி யேதொழு தேத்துமே. 6

வேத மாயவிண் ணோர்கள் தலைவனை
ஓதி மன்னுயி ரேத்து மொருவனைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே, 7

நீதி யாற்றெழு வார்கள் தலைவனை
வாதை யான விடுக்கும் மணியினைக்
கோதி வீண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே. 8

மாலும் நான்முக னுலு மறிவொணப்
பாலின் மென்மொழி யாளொரு பங்கனைக்
கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலி
நீல கண்டனை நித்தல் நினைமினே. 9

அரக்க னய இலங்கையர் மன்னனை
நெருக்கி யம்முடி பத்திறுத் தானவற்
கிரக்க மாகிய வன்திருக் கோளிலி
அருத்தி யாயடி யேதொழு துய்ம்மினே. 10

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருப்பதிக வரலாறு:- குண்டையூரிலிருந்த வேளாண் செல்வராகிய குண்டையூர்க்கிழார் ஆளுடைய நம்பிகளிடம் அளவற்ற அன்புடையராய் அவருக்கு வேண்டிய செந்நெல் பருப்பு முதலியவற்றை அனுப்பிவந்தார். மழையின்றி வளம் பொய்த்துப் பஞ்சம் வரவே, நெல் அனுப்ப முடியாமல் அவர் வருந்த, சிவபெருமான் குவியல் குவியலாக அவர்பால் நெல் நிரம்பும்படி அருள்செய்தார். குண்டையூர்க்கிழார், பெருமானது திருவருளை வியந்து தொழுது, சுந்தரருக்குச் செய்தியைக் கூறி, அந்நெல்லை எடுத்துச் செல்ல ஆட்கள் பல வேண்டுமே என்றார். உடனே நம்பியாரூரர் குண்டையூர் சென்று நெல் மலையைக் கண்டு வியந்து திருக்கோளிலியப்பரைத் தொழுது நெல்மலையையெடுக்க ஆள்வேண்டிப் பாடியருளியது இத்திருப்பதிகம். (பெரிய – ஏயர்கோன் – 10 – 22.)

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்
[ பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே. 1

வண்டம ரூங்குழலாள் உமை நங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புரமூன் றெரி செய்தஎம் வேதியனே
தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே. 2

பாதியோர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக் கங்கை
[ வைத்தாய்
மாதர்நல் லார்வருத்தம் அது நீயும் அறிதியன்றே
கோதில் பொழில்புடைசூழ் குண்டை யூர்ச்சில நெல்லுப்
[ பெற்றேன்
ஆதியே அற்புதனே அவை அட்டித் தரப்பணியே. 3

சொல்லுவ தென்னுனை நான் தொண்டை வாய்உமை
[ நங்கையை நீ
புல்கி இடத்தில்வைத்தாய்க் கொரு பூசல்செய் தார்உளரோ
கொல்லை வளம்புறவிற் குண்டை யூர்ச்சில நெல்லுப்
[ பெற்றேன்
அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே. 4

முல்லை முறுவல்உமை ஒரு பங்குடை முக்கணனே
பல்உயர் வெண்டலையிற் பலி கொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி எம்பெருமான்
அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே. 5

குரவம ருங்குழலாள் உமை நங்கைஓர் பங்குடையாய்
பரவை பசிவருத்தம் அது நீயும் அறிதியன்றே
குரவம ரும்பொழில்சூழ் குண்டை யூர்ச்சில நெல்லுப்
[ பெற்றேன்
அரவம் அசைத்தவனே அவை அட்டித் தரப்பணியே. 6

எம்பெரு மான்நினையே நினைந் தேத்துவன் எப்பொழுதும்
வம்பம ருங்குழலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகைசூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அன்பது வாயடியேற் கவை அட்டித் தரப்பணியே. 7

அரக்கன் முடிகரங்கள் அடர்த் திட்டஎம் ஆதிப்பிரான்
பரக்கும் அரவல்குலாள் பர வையவள் வாடுகின்ருள்
குரக்கினங் கள்குதிகொள் குண்டை யூர்ச்சில நெல்லுப்
[பெற்றேன்
இரக்கம தாயடியேற் கவை அட்டித் தரப்பணியே. 8

பண்டைய மால்பிரமன் பறந் தும்மிடந் தும்அயர்ந்தும்
கண்டில ராமவர்கள் கழல் காண்பரி தாயபிரான்
தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே. 9

கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு நாவல வூரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந் தேத்திய பத்தும்
[வல்லார்
அல்லல் களைந்துலகின் அண்டர் வானுலக காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி உலா

## விநாயகர் துதி

**வெண்பா**

கோளிலியப்பர் குணமூன்றுடையார்தந்
தோளி லுலாமாலை சூட்டுதற்கு – வாளவுணன்
கற்பக வேல்தொட்ட கடவுட்கு முன்வந்த
கற்பகத்தின் பொற்கழல்கள் காப்பு.

## இறைவன் பெருமை

பூமேவு செஞ்சடையான் பூமேவு வேதாவும்
பூமேவு மாலும் புரந்தரனும் – பூமேவு

மாலைபுனை விண்ணவரு மாதவரும் போற்றிசெயுஞ்
சூலதர நீலகண்டன் தோகைபங்கன் – பாலவிழி

அங்கியான் வாமவிழி யந்திமதி யாவலக்கண்
பொங்குகதி ராகப் புனைந்தருள்வோ – னெங்கும்

மருவா யுருவாகி யண்டபகி ரண்டத்
துருவாய்ச் சுருதிபுகழ்ச் சொல்லாய்த் – தருவாய்மை

யொன்றாய்ப் பலவாகி யோமென்னு மோரெழுத்தாய்க்
குன்றாத ஞானக் கொழுந்தாகி – யென்றும்

பலகோடி யண்டம் படைத்தளித்து நீக்கி
யுலகே ழுடையா னொருவன் – மலரோனோடு

அஞ்சக் கரத்தா னனுதினமும் போற்றிசெயு
மஞ்சக் கரத்தா னருளுடையோன் – நஞ்சுநுகர்

சங்கரன்பொன் மேனியினன் சாற்றுந் தமிழ்ப்புலவன்
கிங்கரன்பொன் மேரு கிரிவளைத்தோன் – மங்களமாய்க்

கோளிலிவாழ் வேதக் கொழுந்தாகிச் செங்கமலத்
தாளரியுந் தேடுந் தனித்தலைவ – னுளமுறும்

### பிரமன் வழிபாடு

பங்கயத்தில் வேதன் படைக்குந் தொழில்பெறற்குச்
சங்கரனைப் பூசைசெயத் தக்கதென்று – வங்கணமாய்

வாசமுறு புட்ப வனமேவிச் சந்த்ர நதி
வீசுந் திரைகொழிக்கும் வெண்மணலை – நேசமுட

னேர்க்கும் பரம விலிங்கமா கப்பிடித்துச்
சீர்க்கொன்றை வேணியனைத் த்யானித்துப் – பார்க்குஞ்

சிவபூசை கற்பமெலாஞ் செய்தபின் வேத
நவபூசை கண்டிரங்கு நாதன் – தவவிரிஞ்சன்

கண்டு களிகூரக் காட்சி கொடுத்ததற்பின்
முண்டகத்து வேதா முகமலர்ந்தே – யண்டர்பிரான்

கோயில் வகுத்துக் குளிர்திருவி ழாநடத்தி
நாயகன்பேர் ப்ர்மபுரி நாதனென்றுந் – தூய

பிரமபுர மென்றுபதிப் பேர்கொடுத்தும் வேதா
வரமுதவு தீர்த்தம் வகுக்கத் — திரமான

நீற்ருல் விளங்கு நிமலன் பதியைமுன்பு
தேற்ரு வனமென்று செப்புவார் – போற்றுகம

லத்தனுக்கு ஞான மருளியளிக் குந்தொழிலிற்
சித்தந் தெளிவுவரச் செய்ததனுன் – முத்தர்திருப்

பேர்கோ ளிலியென்பார் பேருலகம் போற்றிசெயுந்
தார்கோடி சேர்மௌலிச் சங்கரன்றன் – ஓர்பாகங்

கொண்டமருஞ் சங்கரிக்குக் கூறுந் திருநாமம்
வண்டமரும் பூங்குழலி மானென்பார் அண்டருக்கா

## முசுகுந்தன் செயல்

முன்பு சகாய முசுகுந்தன் செய்யவிந்த்ரன்
இன்ப முறுவரங்கேள் என்றுரைப்ப – அன்புடனே

யாழித் திருமா லளித்தசெல்வத் த்யாகரென்னு
மூழிப் பரனை யுதவுகென்ன – வாழியா

யன்று மகவா னருமைப் பெருமானை
மன்றல்மலர்க் கையால் மகிழ்ந்தளிப்ப – வென்றிமன்னன்

ஏழு விடங்க ரினுங்கா விரிநாட்டில்
வாழ்வு பெறுசிவனை வைத்ததனில் – வேள்வி

யவனி விடங்கனுமா யண்டரெலாம் போற்றுஞ்
சிவனிவிடத் தேயிருக்கச் செய்து – நவமணியிற்

செம்பொனுற் செய்த திருக்கோ யிலுமதிலுஞ்
செம்பதும ராகத் திருத்தேரும் – அம்புவியுந்

த்யாகப் பெருமான் றிருப்பூசைக் கீயவருள்
நாகத் திருக்கோ ளிலிநாதன் – யோகமுள்ள

பாண்டவர் வழிபாடு

பாண்டவர்க ளைவருந்தம் பாரா ளரசிகந்து
தாண்டுபுக ழேக சக்ர நக – ரீண்டிவரும்

ஐய மெடுத்துண்ண வதனி னரபலிகொள்
கையன்ப காசு ரனைவீமன் – கையினுல்

கொல்ல வவனுருவங் கொள்பிரம கத்தியெனுந்
தொல்லைப் பெரும்பாவஞ் சூழ்ந்துகொள்ள–நல்லுலகில்

இப்பாவந் தீர்த்திடுவா னெம்பெருமான் கோளிலியான்
அப்பார் சடைமுடிய னுமென்று – தப்பாமல்

இந்து நதிமூழ்கி யெம்பெருமா னைப்புகழ்ந்து
குந்திமக்க ளைவர்களுங் கோயில்புக – நிந்தைப்

பிரமகத்தி நீக்கும் பிறைசூடி சூலக்
கரமிகுந்த செய்யநுதற் கண்ணன் – பரவைக்குச்

சுந்தரர்க்கு அருளல்

சுந்தரனர் சேர்முன்பு தூது நடந்துமவன்
பைந்தமிழ்க்குச் செம்பொன் பரிசளித்து – நொந்தபசிக்

கண்டர்புகழ் குண்டையூ ராளுமொரு வேளாளன்
கொண்டலெனுங் காராளர் கோத்திரத்தான் –
தண்டமிழ்க்குச்



ஸ்ரீ கல்யாண சுந்தரர்

நாலுடையான் பார்கள்பதி ஞாலுடையான் காலுதைத்த
காலுடையா னூழில்வருங் காலுடையான் - தோலுரித்த

நாகத்தான் மெய்யணிந்த நாகத்தான் தொண்டான
நாகத்தான் வாழும்வெள்ளி நாகத்தா - ஞகத்தின்

கள்ளப் பசிக்குக் கருதுசிறுத்தொண்டனூர்
பிள்ளைக் கறிக்குகந்த பெற்றியா - னுள்ளத்தின்

நீளை நினைந்ததிரு நீலகண்டச் சக்கிரிதன்
சூளை நிறைவேற்றத் தோன்றினேன் - மூளைவெட்டு

மிண்டார்க்குந் தாதைகழல் வீழும் படிபுரிந்த
சண்டீச னுக்குமொரு தாய்போல்வான் - சுண்ணடெலியுந்

தாவி விளக்குத் திரியொளிரத் தானெழுப்ப
மூவுலக முங்கொடுத்த முக்கண்ணன் - தாவுமரித்

தண்டலையு மாளிகையுஞ் சாளரமுங் கோபுரமுங்
கொண்ட றவழுங் குளிர்மதிலுங் - கொண்டவளத்

தென்கயிலை யான திருக்கோ ளிலிநாதன்
பொன்கிரியில் வாரிப் பொழிந்ததென - நன்கார்

இறைவன் திருக்கோலம்

திருப்பா லபிடேகந் தீங்கரும்பு செந்தேன்
விருப்பா மபிடேக மேவி - யருட்புரிந்த

கங்கா நதிப்புனலுங் காவேரி நன்னீருங்
கொங்காரு மாழிக் குளிரமுதுஞ் - சங்கினத்தாற்

செய்யு மினிய திருமஞ் சனமாடித்
துய்யசெம்பொற் சோதித் துகிலணிந்து - செய்ய

பவள நிற வெற்பிற் பரந்த நிலாப்போலத்
தவள நிற வெண்ணீறு சாத்திக் - குவலயத்தின்

மந்தரத்தைச் சூழ்ந்திலங்கும் வாசுகி போன்மருங்கிற்
சுந்தரப் பொன்னரைஞாண் சூட்டியே - விந்தகிரித்

தோகை யணிவகுப்புச் சூழு மணிகட்டி
வாகு வலயம் வயங்கவே - நாகரிகத்

தண்டலையின் மீது தயங்கு மதிநிலவைக்
கண்டசர முத்தணியுங் காட்டவே - குண்டலங்கள்

காதில் விளங்குவது காமர் கனகவெற்பில்
ஆதித் தருங்கடுப்ப தாமென்னச் - சோதிச்

சடையி லணிமகுடந் தங்கக் கொடியின்
விடையுங் கொடிக்கரசா மின்னச் - சூடிகையின்கீழ்ப்

பட்ட மதிக்குப் பரிவேட மிட்டதென
வட்ட வதன மதிவாய்ப்பத் - துட்டருறை

முப்புரத்தை நீருக்கு மூரி நகையடியா
ரைப்புரக்குஞ் சோதிநில வாய் விளங்கச் - செப்பவினி

யொப்பிலாச் சேட வுரக படாமணியு
முப்புரி நூலு முறைதயங்க - மெய்ப்பாய்

விடநாக கங்கணங்கண் மேவுத் தரியந்
தடநாகத் தோலுரியுஞ் சாத்தி - யுடைவாளை

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
113030
O23:38.21193.T
N64-21

வேங்கைப் புலித்தோல் விசித்த திருவழகும்
பூங்கற் பகவல்லி போல்விளங்கத் - தாங்கியநட்

சத்திர மாலை தழைப்பத் தழைப்பவில்வ
பத்திரமாலை பலதழைப்பக் - கொத்திலங்கும்

வஞ்ச விரிஞ்சன் மகுடச் சிரமாலை
நஞ்சு நுகர்களத்தி னாற்றியே - பஞ்சவர்கள்

முன்னா ளளித்த முழுமணிப்பொன் னாபரணந்
தன்னா லிரவி தயங்கவே - யிந்நாள்

தரும புரஞான சம்பந்த சாமி
மருமலர்ப் பாதம் வணங்குங் - கருமச்

சிதம்பர நாதமுனி செம்பொனா ரச்செய்
விதம்பரவு மாபரண மின்ன - நிதம்பரவூ

ஊழிக் கடைநா ளுலகங் களைத்திரிக்குஞ்
சூழ்த் திரிசூலத் தொல்படையும் - வாழி

வலக்கையி லேந்து மழுவும் வடவை
யலைக்கு மொருகங்கை யாறுந் - தலைக்கண்ணு

மெம்மா னிடதுகரம் பெற்ற திருமானும்
அம்மா னிடத்துறையு மம்மானின் - கொம்மையிளம்

பச்சை யொளியைப் பசும்புல் லெனக்கறிக்கு
முச்சிதமுந் தொண்ட ருளங்களிப்ப - வச்சிரமுஞ்

சக்கரமும் வில்லுந் தனிவாளுஞ் சங்குமெனத்
தக்க தசாயுதங்க டான்றரித்துச் - செக்கர்முகில்

ஐம்மேகஞ் சூழ்ந்திலங்கும் வண்ணத் திருச்சாந்தம்
மென்மேல் விளங்க விருந்தொளிர – நன்மைதரும்

வண்டமரும் பூங்குழலாள் வாமபா கத்திருக்க
விண்டநடு விற்கந்த வேளிருப்ப – முண்டகத்தோன்

தானமைத்த சிங்கா தனத்திற் கொலுவிருந்து
வானகத்து ளோர்பூ மழைபொழியக் – கானவித்தை

## இறைவன் புறப்பாடு

நாரதனுந் தும்புருவு நாடி யிசை பாடப்
பூரிதயாழ் வீணையிசை பொம்மென்ன - வாருதிபோல்

வேதக் குழாம்பயிலும் வேதியருஞ் சூழ்ந்துதொழப்
பூத கணங்கள் புடைநெருங்க – மாதருகிற்

சந்திரவி னேவுந் தமிழோர் சிகாமணியாஞ்
சுந்தரனும் பாடித் துதிசெய்ய – வெந்தைபங்கின்

அம்மை முலைப்பாலிற் கம்பவள வாய்திறந்த
சம்பந்த மூர்த்தி தமிழ்ப்பாடக் கம்மென்னு

மப்பரவைச் சூடுமெங்க ளையன் றிருச்செவியி
லப்பர் திருநா வருந்தமிழைச் – செப்பப்

பெறுமுத்தி பெற்ற பெரியோர்க ளென்னும்
அறுபத்து மூவருநின் றார்ப்ப – மறுவகற்றும்

நந்திப் பிரானு நவில்கட் டியங்கூற
வந்திக்கும் வானோர் மணிமகுட – பந்திகளும்

ஒன்றொடொன் றாக வுலகம் பதினான்கு
மொன்றொடொன்று மாயுருட்டி யூடாட - மன்றில்

அரமகளி ராடமணி யாலத்தி யேந்தி
வரமகளிர் பாடி மகிழ - விரவுதிருச்

சின்னம் பணிமாறச் சீர்ச்சங்க மார்பரிப்பத்
துன்னும் பலமுரசஞ் சூழ்ந்தொலிப்ப - மன்னுங்

கெடிக்காலி லாடரவக் கிண்கிணியு மாடக்
கொடிக்கணமர் மால்விடைகூத் தாடத்-தொடைக்கிசைந்த

செங்கழுநீர் மாலையுடன் செவ்வந்தித் தோடாடக்
கொங்குலவு பீலிக் குடையாட - வெங்குமன்பர்

கொண்டாடி யானந்தக் கூத்தாடக் கண்டுவந்த
தண்டா மரைமயிலுந் தானாடத் - தண்டில்

அசைந்து நடித்துவரு மண்ணல்தியா கேசன்
இசைந்ததிருக் கோளிலிவா ழீசன் - கசிந்துருகு

மெய்யன்பர் நெஞ்சத்தின் மேவுந் திருவுருவான்
செய்ய திருவீதி சேர்ந்தளவிற் - றுய்யவராம்

### தேவர் புடைசூழ்தல்

வானவரு மிந்திரனு மாலுந் தவமுனிவோ
ரானவருங் கூடி யணிநெருங்கச் - சேனைகொண்ட

மன்னவரும் வீதி மறையோதும் வேதியருந்
துன்னிவரும் வீதியினிற் சூழ்ந்திலங்கப் - பன்னிருஞ்

சந்தனமுங் கற்பூரச் சாந்துஞ்சவ் வாதுமிகு
கந்தப் பொடிகளப கத்தூரி – யிந்தக்

கலவையுல கெல்லாங் கமகமெனத் திங்கள்
நிலவை யிகலி நிலவப் – பலதாளப்

பண்ணுடனே தேவாரம் பாடுந் திருக்கூட்டங்
கண்ணிமையா வானோர் கணமென்ன – நண்ணுந்

திருஞான சம்பந்தர் சித்தங் களிப்ப
வருஞான சம்பந்த மாலாய்க் - குருபாதஞ்

சிந்தை மறவாச் சிதம்பர நாதமுனி
வந்து சரண மலர்போற்ற – முந்தவரு

மாகுமிசை யைங்கர னு மாறுமுக வேலவன்றன்
தோகைமயின் மேலுந் தொடர்ந்தேற – வேகத்தோ

டெண்ணுங் கலுழன்மிசை யேறத் திருமாலும்
அன்ன மதன்மே லயனேற - நன்னெறிசேர்

இந்திரனும் வெள்ளானை யேறிவர வெண்ணிலாச்
சந்திரன்வி மானந் தனிலேறச் – செந்தழலோன்

மைவா கனமேற மானுழையைக் காற்றேறக்
கைவாய் மறலி கடாவேறப் – பைவாய்

மகரமீ தேற வருண னிருதி
யிகலார் சிவிகையின்மே லேறப் - புகலு

மணிசே ரிவுளி யளகேசனேறப்
பணிசேர் விமானங்கள் வானோர் - கணமேலா

யேற வியக்க ரிசைபாடக் கந்தருவர்
கூறு மிசையாழ் கொடுபோற்ற - வீறிரத்ன

## இறைவன் திருவுலாப்போதல்

சிங்கா தனத்தியாகர் தென்கோ ளிலித்தியாகர்
சிங்கார மேரு வெனச்சிறந்தே - யங்கணூர்

பொன்னூழி பூட்டிப் புவனம் பதினுன்கு
மின்னு கரத்தின் மிளிர்ந்தொளிரப் - பன்னுந்

தியாகக் கொடிசெழிப்பச் செய்ய திருத்தேர்
தியாகப் பெருமான் சிறந்தேறி - நாகரிக

வைகாசி மாதம் வசந்தத் தியாகேசர்
ஓய்யார மாகவரு மும்பருக்குஞ் - செய்ய

கமலத்து நான்முகற்குங் கண்ண னுக்கு மெட்டா
விமலப் பரஞ்சோதி மேன்மை - யமலன்

அருமைப் பெருமா னவன்வந்தான் வந்தான்
கருமைக் களப்பரமன் வந்தான் - பெருமையினில்

ஒப்பிலா மூர்த்தி யொருவன்வந்தான் வாசவன்செய்
கற்பனையில் பூசைக் கடவுள்வந்தான் - மைப்பலநேர்

மாயோன் திருமார்பில் வாழும் பரன்வந்தான்
வேயீன்ற முத்து வெளிவந்தான் - றூயன்

திருக்கோ ளிலிநாதன் தேவர்பிரான் வந்தான்
மருக்கூ விளந்தரித்தான் வந்தான் - திருக்கயிலைச்

சுந்தரன் தூதனுந் துய்யபர மன்வந்தான்
அந்தரி பங்கி லரன்வந்தான் – இந்தநாள் 120

என்று திருச்சின்ன மினிய விருந்தூத
மன்றல் அளகத்தின் மாண்பாருந் – துன்றுசெம்பொன் 120

குழாங்கள்

வானத் தரம்பையரு மண்ணுலக மங்கையரு
மானொத்த நாக மடந்தையரும் – தேனொத்த

விஞ்சையர்கண் மங்கையரும் விண்ணுமண்ணு
[முன்னிறைந்து
வஞ்சி நிகர்த்த மருங்கசையக் – கஞ்சமலர்ப்

பாதமணி நூபுரமும் பைம்பொன்மணி மேகலையுந்
தாதமரும் பூங்குழன்மேற் றண்ணளியுங் – கீதமுடன்

பாடுந் தொழிலும் பரத விதத்தொழிலுங்
கூடும் படிபாரக் கொங்கைவெற்பை – மூடுதுகி

லுத்தரீ யத்தி லொளிர்வெயிலும் வெண்ணிலவும்
பத்திபா யுந்தொழிலும் பாராட்டிச் சுத்தவளைக் 125

காதள வோடுங் கடைக்கண்ணும் வெண்முருந்திற்
சீதள வாணகையுஞ் செங்கமலப் – போதளவாக்

காட்டிற் பரித்தசிலை கன்னன்மா ரப்பயலை
வாட்டத் துணிந்த மடநல்லார் – நீட்டுகொடி

மாளிகையி லேறி மலர்க்க ணிமையாமற்
சாளர வாசல்வழிச் சஞ்சரிப்பார் – கோளிலியூர்

வீதிநெருங்க மிடைவார் திருத்தேரிற்
பாதிமதி வேணியனைப் பார்த்தயர்வார் – காதல்கொண்டு

வண்டமரும் பூங்குழலை வாமத் திருப்பவளைக்
கண்டு தொழுது களிகூர்வார் – பண்டரனுர்

தோடரவச் செஞ்சடையுஞ் சோதி மதிமுகமு
மாடரவக் கிண்கிணிக்கா லம்புயமுங் – கேடில்மத

வேளனைய ரூப மிளிரொளியுங் கண்டுகொண்டு
வாளனைய கண்ணுர் மயங்குவார் – கோளிலிக்கு

நாயகனை வானவர்க்கு நாயகனை வாழ்தியாக
நாயகனை நான்முகற்கு நாயகனைத் – தேவரத்ன

சிங்கா சனனைத் திருவனையார் கண்டவரா
யங்கான மையலி லாழ்ந்திட்டுச் – சங்கரனுர்

மானிருந்த கையன்மேன் மாலாகிச் சில்லோர்கள்
தேனிருந்த வண்டெனவே தேடிமொய்ப்பார் – கூனிருந்த

செய்யமதிச் செஞ்சடையான் செம்பொ னிகர்வடிவை
மையணிந்த கண்ணுன் மகிழ்ந்துண்டு – துய்யவள

முத்திலங்கு வெண்ணகைக்கு மோகித்துப் பாரகத்திற்
சித்திரம்போ னின்று திகைத்திடுவா – ரித்தலத்திற்

பூச்சொரிந்த கொம்பெனவே பூணு மணிசோர்ந்து
மூச்செறிந்து கைகூப்பி முன்னிற்பார் – கூச்சமின்றிப்

பன்னக பூடணனைப் பார்ப்பார் பழிகாமச்
சன்னத மாடித் தயங்குவார் – அன்னவரில்

## பேதை

பூவாதமா தவிபூங்கொம் பினிலிருந்து
கூவாத பேட்டுக் குயிற்பிள்ளை - ஆவலுடன்

கீர்த்தி மொழி சொல்லாக் கிளிப்பிள்ளை
கொண்டையொத்துக்

கூர்த்தடங்கண் கள்ளமில்லாக் கொம்பனையாள் -
பார்த்தவர்கள்

நெஞ்சை யுருக்கிவிடு நீண்மதலை வாக்குடையாள்
பஞ்சை நிகரும் பதமுடையாள் - மஞ்சுளமார்

செந்தே னிளநிலாச் சேரு மதிக்குழவி
யந்தே னலம்பா வரவிந்த - மந்தமுறக்

கூட்டி முடிப்பதற்குக் கூடாத கொண்டையாள்
பூட்டுங் குழைக்குதம்பைப் பூணினாள் - சூட்டுபணிப்

பொற்றொடியார்க் கன்புசெய்யாப் புன்மாந்தர்
சென்மம்போல்
இற்று முளைக்கு மெயிற்றினா - ளூற்றமணி

கண்டம் புனையுங் கரியமா ணிக்கமணி
கொண்ட திருவனைய கோலத்தாள் - முண்டகம்போற்

கூறு முகத்தினாள் கோதில்வா யாம்பலினின்
றூறு மதலை யுள்ரயினாள் - கூறியசொல்

பூவைக்குங் கிள்ளைக்கும் பொன்னா லிழைத்தமரப்
பாவைக்குந் தாலாட்டும் பண்பினா - ளாவலுடன்

றங்கவளை யுஞ்சரியுஞ் சாற்றுஞ் சிறுபவளக்
கங்கணமுங் கட்டிவைத்த கையினாள் - செங்கனகச்

சிற்றாடை சுற்றுஞ் சிறுகிடையாள் சிற்றடியிற்
பொற்பார் சிறுசதங்கைப் பூணினாள் - சிற்றாயஞ்

சூழச் சிறுபானைத் துய்யமணற் சோறாக்கு
மேழைப் பருவத் திளம்பேதை - வாழியா

யன்னையர்தம் மொக்கலைமே லாக்கியிதழ் முத்தாரப்
பொன்னனையும் வீதி புறப்பட்டாள் - பன்னுமறை

தேடும் பரமத் தியாகேசன் றன்னை யசைந்
தாடுந் திருத்தா ளழகனையே - கூடுமறை

நாலுக்கு மெட்டாத நம்பரனைச் சம்பரனை
மாலுக்குங் காணரிய மன்னவனை - நாடிப்

பணிவார் பணியப் பணிந்தா டிருநீ
றணிவா றணிய வணிந்தாள் - மணிசேர்

கனகத் திருத்தேரைக் கண்டிமையா நின்றாள்
அனகர் கரத்தே யணியுந் - தனதான

மானை விளையாட வாவென்றாள் செய்யசடைக்
கானமதி யம்புலியைக் காட்டினா - டானரன்பால்

வண்டார் குழலாளை வானுலக மீன்றாளைக்
கண்டா ளிருகண் களிக்கின்றா - ளொண்டொடிபான்

மெய்ப்பா யிருந்து விளையாடச் செல்வனென
வெய்ப்பா யழும்பேதைக் கேந்திழையார் - தப்பாமற்

றேமிருக்குங் கொன்றைத் தியாகர் மனையாள்போல்
யாமிருக்க வேண்ட லெளிதாமோ - வாமகளே 100

யென்று செவிலி யிருகையி னுலணைத்துக்
குன்றுநிகர் மாளிகையிற் கொண்டகன்ருள் - மன்றில்வரும்

பெதும்பை

பெண்ணு ரமுதப் பெதும்பை யொருத்தி மலர்க்
கண்ணுலே மானழகைக் கைக்கொண்டாள் - பண்ணுர்

கிளிக்கு மழலை மொழிகொடுத்துச் சீர்த்தி
யளிக்குங் கிளிமொழிய ளானு - ளொளிக்கு

மயிலிடத்துச் சாயலையும் வாங்கினுள் செய்ய
கயிலிடத்துக் காந்தள்வரக் கற்ரு - ளொயிலிடமாம்

அன்ன நடைபோல வழகுநடை யாதரித்தாண்
மின்னி னிடையிடையும் வேண்டினுள் - பொன்னின் 165

கொடியிடத்து மேனிக் குணங்கற்ருண் மெல்லக்
கடிதடத்தாற் றேரழகு கற்ருள் - வடிவுகொண்ட

செந்தா மரைபோற் றிருமுகத்தாள் சீதநிறைக்
கொந்தாரு நாசிக் குமிழினுள் - சிந்துரஞ்சேர்

வாலைச் சிறுநுதலாள் வண்மைபெற்ற பொன்னேலைக்
கோல மருவுங் குழைக்காதா - ணீலமணிப்

பொன்னித் திலமாலை பூண்டு வடிவொழுகுங்
கன்னிக் கமுகனைய கண்டத்தாள் - பன்னணிசேர்

முத்தணிந்த வேய்போல் மொழியுமிரு தோளினுள்
சித்திரம்போ னின்றுடுஞ் செவ்வியாள் - பத்திரமாய்த்

தென்னஞ் சிறுகுரும்பைச் சீர்போற் சிறந்திருக்குஞ்
சின்னஞ் சிறியமுலைச் சேயிழையா - ளிந்நிலத்திற்

கண்ணுக் கழகாகக் காட்டுங் கலன்பூண்டு
பெண்ணுக் கழகாம் பெதும்பைமா - னன்னுதலார்

சூழச் செவிலி தொடர்ந்து பரிவாக
வாழக் கழங்காட வந்திருந்தா - ளேழையிவ

ளேந்துங் கழங்கை யெறியவிழி யுள்ளவொளி
பாய்ந்தருகு நீலம் பரந்ததாற் - காந்திகொண்ட

செவ்வா யளவுவரச் செப்புஞ் சிறுநகையால்
மெய்வாய்க் கழங்கும் வெளுத்ததாற் - கைவாவி

யப்பொற் கரத்தி லணியும் பொழுதிலந்தச்
செம்பொற் கழங்குஞ் சிவந்ததா - னம்பன்

கைலைமலை யிந்துநதி காவேரி நாடு
மியலாந் திருக்கோ ளிலியூ - ரொயிலான

செங்கழுநீர் மாலை சிறந்தகரு திப்புரவி
யங்கவ் வயிரா வணக்களிறுந் - துங்க

விடைக்கொடியுந் த்யாக விருதவுணர் தம்மை
முடுக்கு முழவ முரசு - மடுக்கும்

பலகோடி யண்டம் பரவுசெங்கோன் மற்றும்
பலவாய்க் கழங்காடிப் பாடி - யுலவக்

குமுறுதிருத் தேரொலியுங் கொண்முரசுங் கேளா
ஞிமிறமரும் பூங்குழலா ணோர்போ - யமலனையே

கும்பிட்டாண் மெய்விரகங் கொள்வதுங்கொள்ளாததுமாய்
நம்பு திருமடந்தை நண்ணினாள் - கும்பமெனக்

கொங்கை யுடையாள் கொடுமை விழிக்கடையாள்
சங்கை யிடையுந் தளர்வில்லா - ணங்கைநிற்பக்

கண்ட மதனன் கடுங்கணையைப் பார்த்திவளைச்
சண்டைசெய்யா தப்புறம்போய்த் தானின்றா -
[னொண்டொடியாள்

மங்கை

இன்ன மொருத்தி யிரதி மதராசன்
றன்னை வருத்துந் தகைமையாட் - கன்னன்

மதுர மொழியு மதிமுகங் காதி
லெதிரும் விழிக்கடையு மின்ன - முதிராக்

களப முலையுங் கழைபோற் றிரண்ட
புளகப் பணைத்தோளின் பொற்பு - மளகக்

கருமுகிலுந் தொண்டைக் கனிவா யிதழுந்
திருமகளை யொத்த சிறப்புங் - குருகிருந்த

காந்தளங் கையுங் கலக லெனுங்கலையும்
பூந்தடவேய்த் தோளும் புடைமுலையாற் - றேய்ந்த

சிறுமருங்குன் மின்னுஞ் சிவந்த மலர்த்தாளு
முறுகுமுறு நூபுரமு மோர்ந்து - மறுகத்

தவஞ்செய்யு மாமுனிவோர் தங்கள் குணமெல்லா
மவஞ்செய்ய நிற்கு மழகு - நவஞ்சிறந்த

சித்ரமுயிர் பெற்றுநடை கற்றவிர கத்தில்வரு
சித்தசனை வெற்றிகொளு முத்துநகை - வித்துரும

மொத்தவிதழ் மத்தகச மொத்ததன முத்தமிழ்வ
டித்தசுவை யொத்துமது ரித்தமொழி - யுத்தமிகீழ்

வந்ததிலோத் தமைபோல் வாறு டரம்பயைப்போல்
வந்த சரச மடமங்கை - சந்திர நதி

முத்திரைக்கும் வாரி முளரிமலர் வண்டினங்க
ளொத்தெழுந் தாங்க ணுரைவெயில்காய் - நத்ததனை

யுந்தி வெருட்டுப்வய லூர்க்கோ ளிலிநாதன்
வந்தனன் றேரேறி வந்தானென் - றந்தமிலா

மாதர் நெருங்கி வருவீ தியினடந்து
தீதிலாத் தியாகனையே தெண்டனிட்டாள் - காதலா

யேந்திழையு நின்று ளிருகை வளைசோர்ந்து
சோர்ந்துமணி மேகலையுஞ் சோர்ந்தயர்ந்தாள் - காந்தனே

மங்கைப் பருவமிந்த வாலிபம்போ ஞல்வருமோ
கங்கைச் சடையாய் கலந்தணைவாய் - மங்கையொரு

பாகத்தா னென்னையுமன் பாகத்தான் மேவ்ாமன்
மோகத்தான் வாட்ட முனிவேது - நாகரிகச்

செந்தே னிதழியாய் செந்தே னிதழியான்
வந்தே னிதழ்த்தேன் வழங்குவாய் - சுந்தரற்கா

ஏசப் பரவைதிரு இல்லுக்குத் தூதுசென்ற
வாசை கொடிதென் றறியாயோ - நேசமலை

மின்னைத் தழுவி விளங்குமொரு பங்களித்தா
யென்னைத் தழுவிலுனக் கீனமோ - முன்னமொரு

மாலான மோகினிக்கு மாலாகு யானுமுன்மேல்
மாலானேன் மாலைதர வல்லையோ - மேலானே

யென்று மடந்தை யிவைபுகலத் த்யாகனிவன்
நன்றுரைத்தா ளென்று நகைவிளைத்துச் - சென்றதடந்

தேரகல வந்த திருந்திழைமேற் போர்மாரன்
வீரமலர் வாளி விடுத்தயரக் - காரிகையை

மாதர் கொடுபோய் மலரணைமேற் சேர்த்தினுர்
காத லுவரிக் கரைகாணு - ளாதரத்தோடு

மடந்தை

இன்ன மொருத்தி யெதிர்மாரன் தெண்டனிட
மன்னு கமல மலர்ப்பதத்தா - ளன்னத்தை

யொத்த நடையா ளுமைசிறுவ னைத்தன்மேல்
வைத்த மயிலைநிகர் மாண்புடையாள் - சித்திரமாய்

நீலமணிந்தா ணிதிசேர் மலையளித்த
கோலமக டன்னையொத்த கோலத்தாள் - வாலைதிரள்

கொங்கைத் திருமடந்தைக் கோல மெனத்தயங்கு
மங்கைக்குயர்ந்த மடந்தைமான் - செங்கையினுற்

பந்தடிக் கின்ற படபடப்போ டாண்மருட்டுஞ்
சந்தடி கொண்ட தனங்குலுங்கக் - கொந்தளகப்

பாரஞ் சரியமுகப் பங்கே ருகம்வியர்ப்பச்
சோருமருங்குல் துவண்டசைய - நேரிழையும்

நின்ற திருவீதி நேராக நீள்சடைமேல்
கொன்றை புனைந்த திருக் கோளிலியான் - வென்றிபெறும்

ஆழித் திருத்தே ரனகனரு மைப்பெருமான்
வாழித் திருத்தாள் வணங்கினாள் - ஏழையிவள்

பெண்மதியு மென்ன பிழையோ திருமால்போற்
கண்மலரைச் சாத்திக் கசிந்தாலுந் - தண்மலர்க்கை

யாழி யிழந்தா ளணிவளையுந் தானிழந்தாள்
சூழியமும் பொற்பணியுந் தோற்கின்றாள் - வேழமதன்

கையிற் கணைபொழிந்த காயத்துக் காற்றிலாள்
மையற் பிணிக்கு மருந்தறியாள் - தொய்யில்

முலைகடனைக் கண்ணீர் முத்தருவி கொள்ள
வலைகொள்ள நின்றா ளவளை - விலைகொள்ளு

மாதரைப்போல் வெட்கமறந்தா ளெனத்தழுவிக்
கோதையரு மாளிகையிற் கொண்டகன்றார் - மாதொருத்தி

அரிவை

ஆலைக் கரும்புமொழி யாளரிவை யம்புயஞ்சூழ்
சோலைக்குள் மாமயிலாய்த் தோன்றினாள் - நீலத்தின்

காராருஞ் சோலையுந்தன் கார்க்குழலென் றெண்ணினன்
வாராருங் கிஞ்சுகஞ்செவ் வாயென்று - நேராகக்

குந்த நகையைக் குளிர்வெண் ணிலாவென்றுஞ்
சந்தநிறை முல்லைமலர்த் தந்தமென்றுங் - கொந்திலவு

செண்பகப் பூவைச் சிறந்ததிரு நாசியென்றுங்
கண்பரவு வேலைவிழி காணென்றுந் . தண்பரவு

கொங்கைமுகங் கண்டுபெருங் கோங்கைநிக ராமென்றுந்
துங்கமலர்த் தேனையின்பச் சொல்லென்றும் - பங்குபெரு

காந்தண் மல்ரைமலர்க் கையென்று மாங்கிருக்கும்
மாந்தளிரை மேனி வடிவென்றுஞ் - சேர்ந்த

தளிரா லிலையைவயி றென்றுந் தழைந்த
துளிரா மிளவேய்தோ ளென்று - மொளிரும்

அரசிலையை யல்குலென்று மாங்கு நிறைவாழை
யுரைசெறிந்த வூருவென்று மேவி - யுரையுங்

கிளிக்கு விளம்பிக் கிளருமெகி னத்தை
யளிக்கு நடையென் றளித்துத் - தெளிக்கு

மலர்ச்சோலை விட்டு மடந்தையர்பாற் கூடிக்
கலைச்சீர் மனையணைந்த காலை - யலைசேர்

திருப்பாற் கடலிற் றிருமா லகத்தில்
விருப்பா யெழுந்தருளும் வென்றி - யுருப்பா

யொளிசேர் தியாகேச ரூரு மிரதங்
களிசேர் திருவீதிக் கண்ணே - வெளிசேர்தல்

கேட்டாள் புறம்போந்தாள் கேடியமற் கன்றுக்குந்
தாட்டா மரைதன் றலைசேர்த்தாள் - நாட்டத்து

நோக்கினு ளாரு நுவல வரும்வனப்புள்
தேக்கினுள் கைகள் சிரங்குவித்தாள் . வாக்கினு

ளையரே நீர் மதனை யன்றனங்க னுக்கியவன்
செய்யுந் தொழிலைத் திருவருளாற் - செய்திடுவான்

உன்னியவன் கோலத்தி னேடும் புறப்பட்டீர்
கன்னியர்கள் காமுகர்க ளாகவோ - சென்னிமிசை

யிப்பிறையேன் வைத்தீ ரிராக்காலத் தேயுதிக்கு
மப்பிறை யொன்றே யமையாதோ - முப்புரமும்

புன்முறுவ லான்முன் பொடியாக் கியகதையை
யின்னிலத்தார் நம்பா ரெனநினைத்துச் - சன்மமுறுங்

கன்னியரா மெம்மைநிலங் காணக் கருக்கவோ
வன்னதுடன் வீதி யணைந்திட்டீர் - மின்னு

மதுரையி லின்னும் வளையல்விற்க வோவெம்
மதிரும் வளையல்கொள்வீ ரையா - சதுராக

வோர்பெண்ணைப் பாகம்வைத்தீ ரிவ்வுலகங் காக்கமற்றை
யோர்பெண்ணைச் சென்னிவைத்தீ ரோர்நாண்மற் -
[றோர்பெண்

புலவியக லத்தூது போனீர் மறுகி
லுலவுமுளாக் காணவந்திட் டோமின் - னலநுகரா

தெம்மை மதனலிய வேவிடுத லுந்தமக்குச்
செம்மையோ வெல்லாந் தெரிவிரெனக் - கொம்மை

முலையா ளரிவை மொழிந்தா ளுயிர்த்தால்
தலையால் வணங்கினு டான்மேற் - கலைமுதல

வெல்லம் நழுவ விருந்தாளை யின்கரும்பின்
சொல்லார் பலர்வீட்டுத் தூக்கினர் - நல்லாள் 245

தெரிவை

அரிவையின்பா டிவ்வாறே யாக வொருவல்லி
பரிவையரன் பால்வைத்த பண்பா - டெரிவையலர்

கட்டி முடித்தகுழற் காராள் கவின்பெருகு
வட்டமித் திங்க ளனநுதலாள் - பொட்டதனில்

வைத்ததினு லேயந்த மாதவர்தம் வாழ்க்கையெல்லாம்
பொய்த்ததென வையம் புகல்வனப்பாள் - செய்ப்பிறமுஞ்

சேலே யெனவுந் திருக்குமரன் கையில்வைத்த
வேலே யெனவும் விரிவிழியா - ளாலைக்

கரும்புந் தமிழ்மொழியைக் கற்றோர் திருவா
யரும்புங் கவியுமன, சொல்லாள் - விரும்பு 250

முகமதியி னூடிருந்து மூடாதலர்ந்த
நிகரிலா வாம்பலே நேராப் - பகர்வாயாள்

பாஞ்சசன்னி யம்பயந்து பாற்கடலின் மாலுடனே
நீஞ்ச வெருட்டு நிறக்கழுத்தா - ளோஞ்சிலா

வின்னீர் நிறைந்த விளநீ ரிணைந்தென்னப்
பன்னீர்மைத் தாய பருமுலையா - ளன்ன

பருத்துப் பருத்துப் பருவரலே செய்ய
வருத்தம் பொறுக்காமல் வாடித், தரித்திரமாய்ப்

போந்த புலவோர்க்குப் பொருளிம்மி யேனுந்தொட்
டீந்திடார் செல்வ மெனக்குறைந்து - தேய்ந்தவிடைக்

கன்னிகை பட்டுக் கலைமே கலையாத்துப்
பன்னிய சேமம் படவைத்துந் - துன்னியசீர்க்

கோக்குமர ராவி யெனுந்தவளை கூட்டுண்ணப்
பார்க்குமரப் போலுநிதம் பத்தாள்சீர் - தேக்குமெழிற்

பொன்னனையாள் கோளிலிசூழ் பொன்னி நதிப்படுகை
துன்னு கதலியெனச் சொல்குறங்காள் - துன்னுகணைக்

காலென் சுறவாள் கரண்டகமென் னும்பரடாள்
வாலிய பஞ்சினுக்கு வன்னமிட்டு - நூலுணர்ந்தோர்

செம்பஞ் செனச்செப்பச் செய்யவடி யாள்மயிலை
வம்பென்ன வாட்டுமொரு மாதுமீறு - கும்பர்வரக்

கண்டாள் மதிமயங்கிக் காமுகியாய்ப் பொன்பூப்பக்
கொண்ட லனைய குழல்சரியத் - தெண்டனிட்டுப்

பாடியிலாய் மாதர் பலரைப் புணர்ந்தவன்பால்
நீடிய பாற்கடலி னின்றுள்ளீர் - கூடிக்

குரவன்மனை யைப்புணர்ந்த கூற்று மதிசூடி
யிரவு விடிந்ததென வேக - வரமுனிவன்

போல்வேடம் பூண்டவன்றன் போற்ருெடியா
[யாளைப்புணர்ந்த
சீலமிலி பானெடுநாட் சேர்ந்தீர்முற் - காலத்தின்

மாதவர் மாதர் மதிமயங்கக் கோலங்கொண்
டேத மிழைத்தீ ரிதனுலே - கோதில்

பழக்க மியற்கையிரு பண்பானுமக்கு
வழக்க மிதுதானே வள்ளால் - இழுக்கெமக்கு

நீரே யிழைத்து நிறைகொண்டே ஏகினல்
யாரிடத்துக் கூறுவோ மையாவிப் பாரிடத்தின்

மற்ருேருக் கொன்று வழியுமக்கு மற்ருென்ருப்
பெற்றதென் என்றுரைத்துப் பேருதிரென் - றற்றமுடன்

பேசினுள் வீழ்ந்தாள் பெருமூச்சு விட்டுமனங்
கூசின டன்னையவள் கூடவுள்ள - மாசிலாச்

சீரிழையா ரெல்லாருஞ் சேர்ந்தெடுத்துக் கைப்பற்ருய்ச்
சூரியனை யெட்டும்வீட் டுச்செல்லப் - பேரிளம்பெண்

## பேரிளம் பெண்

வாருதியெல் லாம்பருகி மாமழையா கப்பொழிந்த
காரனைய வோதியினைக் கைப்பற்றி - நேரிழையாள்

பின்னாது நேர்மை பெறமுடித்த கூந்தலாள்
நின்னா வெவர்க்கு மிழைக்காமன் - மன்னுகண்ணாள்

பூரணைச் சந்திரனே போன்றமுகத் தாள்பட்டு
வாரினாற் கட்ட வரமாட்டோம் - யாரோ

அடக்குவா ரெம்மையென வாங்காரங் கொண்ட
குடத்தை நிகருமுலைக் கொம்பு படத்தினையே

முன்ன நிகர்த் திப்பொழுது மூதறிஞர் தேர்த்தட்டுத்
தன்னை நிகருமெனச் சாற்றுமல்கு - லின்னெழிலாள்

தாமாக வந்து சலிக்கா தணைந்தார்க்குக்
காமரச மீயுங் கரும்பூன்றி - யேமமுடன்

பார்ப்பாரே யன்றிப் பலருந் திளைக்கரிய
சீர்ப்பாவைப் பெண்ணரசு தேரேறி - யார்ப்பரித்துத்

தியாகேசர் வீதிவந்த செய்தியினைக் கேட்டந்த
மாகேசர் காண மகிழ்ந்தணைந்து வாகான

சங்காழி வீழ்த்தித் தரித்த கலைதோற்றுப்
பொங்காழி யென்னப் பொழிந்துகண்ணீர் - பங்கேரு

கத்தை நிகர்த்த முகத்தை வெயர்த்துளி
பொத்த வுயிர்த்து வடிக்கணை - சித்தசன்மே

லோயாதே யுய்ப்பத்த னோதிக் கணிந்தமலர்
தீவாய்ப்பெய் தென்னவெந்து தீந்துதிரத் - தாவா

முலேக்கணிந்த சாந்த மொகுமொகென வேவ
வலேப்புண்டு வாய்திறந்தெ மையா - மலேப்பாகத்

த்யாகேச ரென்னத் திருப்பேர் தரித்திட்டீர்
வாகாகத் தம்மிடத்து வந்தோர்க - ளோகையுடன்

கேட்டபொரு ளெல்லாங் கிடையா தெனுதீவார்
நாட்ட முறுதுமென நாங்களெல்லாங் - கூட்டமாய்

வந்தடைந்தோ மெங்கை வகித்தவளே யாழியரைத்
தந்தகலே மற்றுமெமைச் சார்ந்தவெலாஞ் - சொந்தமா 285

யெம்மைக்கே ளாதேயெ மெண்ணக்கு மாருக
வெம்மை மயற் றீயிலெமை வீழ்வித்துச் - சும்மாகைக்

கொண்டீர் சிறிதேனுங் கோதிலா தீருமக்குப்
பெண்டி ரெனப்பே யிரங்குமென - விண்டமொழி

பொய்யாயிற் ருேபுகலீர் நீர்பூத நாதரென
வைய மொழியுமந்த மாற்றத்திற் - செய்ய

நிலேமொழியெந் தம்மையெலா நீக்க விதிதான்
அலேயுலகி லெவ்விலக்க ணத்தோ - கலேமொழிந்தீர்

சொல்லீ ரெனவந்தத் தோகைபகர்ந் தாண்மெலிந்தா
ளெல்லாரு மாத ரெடுத்தவளே - வல்லேத்த 290

மில்லம் புகுந்தாரிவ் வேழு பருவத்து
நல்லாரு நாண முதலவிட்டுச் - செல்லுமா

முப்புரமும் வீட்ட முனிந்தநா ணுன்மறையா
மப்புரவி பூட்டு மருந்தேரே - யொப்பாகுந்

தேரின்மீ தேறித் திருவீதி நான்குஞ்சூழ்ந்
தூர்முழுது மூர்ந்தா னுலா. 293

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி உலா

முற்றுப்பெற்றது

113030.

3.2.78

8B
4-62

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்கள் முகவரியையும் தெளிவாக மணியார்டர் கூப்பனில் எழுதுதல் வேண்டும். பழைய சந்தாதாரர்கள் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா எண்ணைக் குறித்தல் வேண்டும். எவையேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் தலைகள் அனுப்புதல் வேண்டும்,

"ஞானசம்பந்தம்" மாத இதழைப்பெற ஆயுள் சந்தாதாரர்களாகச் சேரவும், தவணை முறையில் ஐம்பதாய், இருபத்தைந்தாய், பத்தாய்த் திங்கள்தோறும் ஆயுள் சந்தாவைச் செலுத்தவும் அன்பர்களுக்கு அரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | ... | ரூ. 100—00. |
| உள்நாடு | ... | ரூ. 4—00. |
| வெளிநாடு | ... | ரூ. 6—00. |

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்,
ஞானசம்பந்தம் அலுவலகம்
தருமையாதீனம்
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சை மாவட்டம்.